Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு + II விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்; மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல. 546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 04 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 06 (19.12.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:80

# சமாதான முயற்சிகளில் தோல்வி; நாட்டில் மீண்டும் யுத்த அபாயம்!

## அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக நோர்வே உள்ளிட்ட வெளிநாடுகள் – அரசாங்கத் தரப்புக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடுகளால் தான் சமாதான நடவடிக்கைகள் தேக்கமடைவதாக குற்றஞ்சாட்டியிருந்த நிலையில் –

இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அரசாங்கம் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்தாலும் ஆச்சரியம் இல்லையென்றும் – இதனால், நாட்டில் யுத்த பீதி தோன்றியுள்ளதாகவும் – அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தியில் மேலும் –

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கும் இடையில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து யுத்த பீதி ஏற்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின் சூட்டில் மட்டக்களப்பில் இளைஞன் பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவன் கேணியில் 24 வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சிவகுரு தியாகராசா (வயது 24) எனற களுவன் கேணியை சேர்ந்த இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதா (12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த 10 ஆண்டுகளுக்கு சந்திரிகாவே ஜனாதிபதியாம்!

## அடித்துக் கூறுகிறார் அனுரா

(கொழும்பு)

அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் எதுவும் நடத்தப்பட மாட்டாது என அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

குருணாகல் நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்த அரசியலமைப்பு மாற்றத்தின்படி, ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்ப்பது போல எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறமாட்டாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஜே.வி.பியினதும் ஏனைய முக்கிய முற்போக்குக் கட்சிகளின் ஆதரவுடனும் வடக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் சக்தி ஜனாதிபதிக்கு உண்டு.

அரசாங்கம் இப்பொழுது நாடாளுமன்றத்தில் பலத்தை 124 உறுப்பினர்களாக அதிகரித்துள்ளது. இந்த உறுப்பினர்கள் சபாநாயகர் பாரபட்சமின்றிச் செயற்படத் தவறினால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவார்கள்.

எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு சந்திரிகா குமாரதுங்காவே ஜனாதிபதியாக இருப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு எடுத்த நடவடிக்கை

# ஆழ ஊடுருவித் தாக்கும் படையணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது

## சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர் போல் ஹரிஸ்

(கொழும்பு)

இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணியின் செயற்பாடுகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையானது இலங்கை இராணுவத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக சர்வதேச பாதுகாப்புத்துறை ஆய்வாளரான போல் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே போல்ஹரிஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

தனது நாட்டு இராணுவத்தினர் மீதே நடவடிக்கை எடுத்த ஒரே நாடு இலங்கை தான். ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்காலத்தில் அத்துருகிரிய மிலேனியம் சிற்றியில் இருந்து செயற்பட்ட ஆழ ஊடுருவித்தாக்கும் இராணுவ புலனாய்வு பிரிவு உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டமையானது இராணுவ நலன்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்தே விடுதலைப்புலிகள் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணியின் புலனாய்வுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யோசனைப்படி

# பேச்சுக்களை ஆரம்பிக்க சுதந்திரக் கட்சி தீர்மானம்!

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள், அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்த யோசனையில் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் மிகவிரைவில் ஆரம்பிப்பதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை தொலைபேசி நேற்று முதல் அவுட்!

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்துடனான தொலைபேசி தொடர்புகள் யாவும் நேற்றுக் காலை 9 மணியுடன் துண்டிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெலிக்கொம் நிறுவனத்தில் நிலத்தடிக் கேபிள் தொகுதிகள் சேதமடைந்ததாலேயே தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

திருத்தப்பணிகளை மேற்கொள்வதற்காக ரெலிக்கொம் பொறியியலாளர் குழுக்கள் திருகோணமலைக்கு வந்துள்ளதாகவும், மீண்டும் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு தொலைபேசி சேவை நாளையே சீராகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ரெலிக்கொம் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அரசாங்கம் யுத்தத்துக்காக படைகளை தயார்படுத்துகிறது!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்

(வண்ணை)

யுத்தத்தை ஆரம்பிக்கும் நோக்கில் அரசாங்கம் பாரியளவில் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட்டு வருகிறது. இதனை முறியடிக்க தமிழீழத் தேசியத் தலைவர் எப்போதோ தயாராகிவிட்டாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

வரலாறு தந்த வல்லமை ஒலிப்பேழை அறிமுக விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசு தமிழ் மக்களைப் பலவீனப்படுத்தி போரை திணிக்க ஆயத்தமாகின்றது. நாம் போரை விரும்புவவர்கள் அல்ல. ஆனாலும் எம் மீது போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள தயாராகவே உள்ளோம்.

கடந்த ஐம்பது வருட காலமாக ஜனநாயக வழியல் நாடாளுமன்றில் போராடி எதனையும் பெறமுடியவில்லை. இதனா (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து இளைஞன் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கிணற்றில் கப்பி பொருத்திக் கொண்டிருந்தவேளை தவறி கிணற்றினுள் வீழ்ந்த இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று நடைபெற்ற இந்த சம்பவத்தில் கொக்குவில் நந்தாவில் உடையார் வீதியை சேர்ந்த மகாதேவன் சதீஸ்(வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் தனது வீட்டுக் கிணற்றில் கப்பி பொருத்திக்கொண்டிருந்தவேளை கப்பியைதாங்கி நின்ற மரத்தின் கிளையை எட்டிவெட்ட முற்பட்டபோதே இவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்ததாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் போது உயிரிழந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# பட்டப்பின் படிப்பு பரீட்சை நாளையதினம் ஆரம்பம்

பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் கல்வியல் மாணி மற்றும் கல்வி டிப்ளோமா பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெற வுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் நேர அட்டவணை என்பனவற்றை பீடாதி பதி அலுவலகம் உயர்மட்டப் படிப் புகள் பீடத்திலும்,

வவுனியா வளாகத்தில் கற்கை நெறியினை பின்பற்றும் மாணவர் கள் வவுனியா வளாக வியாபாரக் கற்கை பீட அலுவலகத்திலும் பெற் றுக்கொள்ள முடியும்.

அண்மையில் நடைபெற்ற அனு மதிப் பரீட்சையின் பெறுபேறுக் கமைவாக யாழ்ப்பாணம் பல்க லைக்கழக உயர்மட்டப் படிப்புக்கள் பீடத்தின் கல்வியியல் முதுமாணி, பட்டப் படிப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய கற்கை நெறிக்குப் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் முறையே நாளை முதல் 21ஆம், 22ஆம், 23ஆம் திகதிகளில் உயர்மட்டப் படிப்புக்கள் பீடத்தில் நடைபெறவுள் ளன.

சம்பந்தப்பட்டவர்களுக்கு நேர் முகப் பரீட்சைக்கான கடிதங்கள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள் ளன. அழைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியலை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என பட்டப்படிப் புகள் பீடாதிபதி தெரிவித்துள்ளார். (17)

## சான்றிதழ் வழங்கல்

2003/2004 காலப்பகுதியில் தொழிற்பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, நாளை மறுதினம் காலை 9 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியி லுள்ள 'அகவொளி' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குத் தலைமை வகிக்கும் யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மாணவர்களுக்கான சான்றிதழ் களை வழங்கிக் கௌரவிப்பார்.

## பாடத்திட்டம் தயாரித்தல்

தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான 2005 ஆம் ஆண்டிற்கான பாடத்திட்டம், பாட விரிவாக்கம் தயாரித்தல் ஆகியவை தொடர்பாக ஆராயும் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் துக்கு அனைத்து ஆரம்பக் கல்வி ஆசிரியர்களையும் தவறாதுகலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறி வித்துள்ளார்.

ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறிஸ்கந்த ராஜா தயாரித்த பாடவிரிவாக்கம் அச்சிடப்பட்ட பதிவுப் புத்தகமும் வழங்கப்படும். (29)

## மாதாந்த சந்திப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அவர்களின் இல்லத்தில் இன்று பி.ப. 2.30 மணிக்கு மாதாந் தக் கருத்தரங்கு இடம்பெறவுள் ளது. இதில் அனைத்து அங்கத்த வர்களையும் பங்குபற்றுமாறு கேட் கப்படுகின்றனர். (29)

## தொழிற்திறன் மேம்படுத்தல் பயிற்சி

வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'நீர்ப்' உதவியுடன் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர் களுக்கான தொழிற்திறனை மேம் படுத்தல் பயிற்சி இன்றும் நாளை யும் யாழ் செயலகத்தில் இடம்பெற இருப்பதனால் அனைத்துத் திணைக்கள அரச உத்தியோகத் தர்களையும் பங்குபற்றுமாறு யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார். (29)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கற்சிலைமடு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த அப்புத்துரை கருணாகரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (672603153X) 16.12.2004 அன்று கொடிகாமத்துக்கும் முக மாலைக்கும் இடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நமது ஈழநாடு அலுவலகத் தில் ஒப்படைத்து உதவவும்.

(C/3493)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த (குளிரூட்டப்பட்டது)

அழகிய தீயே (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே)

தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும்

THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்

விரைவில்:- THE PASSION OF THE CHRIST

(இயேசு தேவரின் வாழ்வின் இறுதி 12 மணிநேரக் கதை.)

நிறைஞ்சனாஸ் சங்கானை

ஸ்ரீகாந், சினேகா, நடித்த

போஸ் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

URASSIC PARK - 3

ராஜா யாழ்ப்பாணம்.

20 வரை சரத்குமார், வடிவேல் நடித்த

சத்ரபதி (ரீல்ஸ்)

புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 மட்டும்

21 முதல் சிம்பு, ஜோதிகா நடித்த

மன்மதன்

YEAR END SPECIAL OFFER

K.K.Phone Service



ஆண்டிறுதி சிறப்புச் சலுகை

K.K.Phone Service

சகலவிதமான தொலைபேசி வகைகளையும் ஒரே கூரையின்கீழ் உத்தரவாதத்துடன் பெற்றிட இன்றே விரையுங்கள்

K.K.Phone சேவைக்கு



NOKIA 3100 | NOKIA 1100 | NOKIA 2300 | NOKIA 3310

அனைத்து வகைத் தொலைபேசிகளும் - லொக் உடைத்து மற்றும் பழுதுபார்த்து, உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

K.K. போன் ஷொப்

இல. 01 நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(C/3468)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 17 - 03 - 1932

உதிர்வு 19 - 11 - 2004

## அமரர் வல்லிபுரம் கிருஷ்ணசாமி

*(விநாயகா மோட்டோர்ஸ் வேக்ஸ் உரிமையாளர்)*

*மீனாட்சி அம்மன் கோவிலடி, சங்கத்தானை - சாவகச்சேரி*

சாவை நகர் பெற்றெடுத்த தொழில்நுட்பனாய்<br>
தரணியெல்லாம் புகழ் பேசும் தகைமை பெற்றீர்<br>
உற்றாரை, மற்றாரை வாழ வைத்தீர்<br>
மறந்தீரோ நாமிங்கு மறவா நிற்போம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் தற்காலிக இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (19.12.2004) முற்பகல் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்வதுடன், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி மூலமும், தபால் மூலமும் அனுதாபச் செய்திகளைத் தெரிவித்த வர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் மற்றும் அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிறப்புற நடைபெற பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்காலிக முகவரி:-<br>
"கோகுலம்"<br>
காளிகோவிலடி,<br>
கோப்பாய் மத்தி,<br>
கோப்பாய்.

நிரந்தர முகவரி:-<br>
மீனாட்சி அம்மன் கோவிலடி,<br>
சங்கத்தானை,<br>
சாவகச்சேரி.

தகவல்:-<br>
குடும்பத்தினர்.

C/3490


BODY TONE

ஆரோக்கியவில்லை



களைப்பையும், சோம்பல் தன்மையை போக்கி, மேலதிக சக்தியையும், சுறுசுறுப்பையும் கொடுக்க கூடியது

நாளொன்றுக்கு தேவைக்கு எற்ப 1 -3

யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை

K.S.P. International Pharmacy Tel : 2449766

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடன் - 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்


## பொதுக்கூட்டம்

### "Whither the Peace Process?"

### 'சமாதானத்தைத் தேடி...'

கலாநிதி லக்ஷ்மண் மாரசிங்க<br>
*ஸ்ரீலங்கா சமாதான செயலகம், அரசியல் யாப்புக்குழு தலைவர்*

கலாநிதி ரஞ்சித் அமரசிங்க<br>
*அரசியல் துறைத் தலைவர், பேராதெனிய பல்கலைக்கழகம்*

தொடர்ந்து

### 'ஒதுக்காதி ஒதுக்கன்'

*அரசியல் முரண்நிலைகளை ஆராயும் வீதி இசை நாடகம்*

Venue: *Navalar Cultural Hall, Anaipanthy*

Date & Time: *December 19, Sunday 2004.*

*4.00 - 6.00 pm*

**All are Welcome!**

*Viluthu, Centre for Human Resource Development*

(C/3489)

# சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பைப் பெற முடியுமாம்!

## ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு



(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஜனாதிபதி சந்திரிகா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதைவிட, ஜே.வி.பியுடன் பணியாற்றுவது இலகுவானது என ஜனாதிபதி சந்திரிகா கருதுவதாகவும், இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பியுடன் முக்கிய பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபட அவர் தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பில் அரசாங்கத்தின் இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வது குறித்து, அரசாங்கம் ஆராய்ந்துவருவதாகவும், ஒரு சில விடயங்கள் தவிர ஏனைய விடயங்களில் இரு தரப்பிலும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் உடன்பாடு காணப்படாத விடயங்களே பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ளது என, நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிப்பது தொடர்பாக இரு தரப்பும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருப்பதாகவும் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

## நடிகர் சாருக்கானை மீண்டும் இலங்கைக்கு அழைக்க ஏற்பாடு

இந்திய திரைப்பட நட்சத்திரம் சாருக்கானை மீண்டும இலங்கைக்கு அழைத்து வர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தனியார்துறை மேற்கொண்டு வருகிறது. அண்மையில் சாருக்கானின் கலை நிகழ்வில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டமை காரணமாக, நாட்டுக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்கும் வகையிலேயே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை அண்மையில் சாருக்கானின் கலை நிகழ்வில் குண்டு வெடித்தமை காரணமாக ஏற்பாட்டாளருக்கு சுமார் 8 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## சடலம் கரையொதுங்கியது

மட்டக்களப்பு - சத்துருக்கொண்டானில் கடலில் மிதந்துவந்த சடலம் ஒன்று படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை காலை 9.45 மணியளவில் மீட்கப்பட்ட இந்தச் சடலம், ஆணுடையதெனவும், மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்களப்பு பொலிஸாரிடம் இது ஒப்படைக்கப்பட்டதாகவும் படையினர் தெரிவித்துள்ளனர்.

## இலத்திரனியல் வாக்களிப்பு விரைவில் நடைமுறைக்கு!

இலங்கையில் இலத்திரனியல் வாக்களிப்பு முறை விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது.

தேர்தல் செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்கு மாதிரி இலத்திரனியல் வாக்களிப்பு முறை குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

இலத்திரனியல் உபகரணங்களை உபயோகித்து, வாக்களிக்கும் முறையை அமுல் செய்வதன் மூலம் 21 கோடி ரூபாவுக்கு மேலான தொகையை மீதப்படுத்த முடியுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் மோசடிகளை இதனால் தடுக்க முடியும். இலத்திரனியல் முறையின் பிரகாரம் குறைந்தளவு உத்தியோகத்தர்களை அமர்த்தி, தேர்தல் முடிவுகளை உடனடியாக வெளியிடமுடியும்.

இந்த வாக்களிப்பு முறையை அமுல்படுத்துவதற்கு இலங்கையின் தேர்தல் சட்டங்கள் திருத்தப்படவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

செய்முறைக் காட்சியை, வாக்களிப்பு இயந்திரத்தைத் தயாரிக்கும் இந்தியாவின் பாரத் எலக்ரோனிக் நிறுவனம் நடத்தியது. சிறிய மின்கலம் ஒன்றுடன் இந்த இயந்திரத்தை இயக்கமுடியும் என கம்பனியின் அதிகாரியான உருத்திரமூர்த்தி கூறினார்.

## புதிய ஜனநாயகக் கட்சியின் பிராந்திய மாநாடு இன்று!

(கொழும்பு)

புதிய ஜனநாயகக் கட்சியின் 4 ஆவது மலையகப் பிராந்திய மாநாடு இன்று ஹற்றன் சக்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை உடனே அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். முஸ்லிம் மலையக தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகளை நிறுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## ஜப்பானியப் பெண்ணுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டதால் விமானம் அவசர தரையிறக்கம்!

### ஆனாலும் அவரது உயிர் பிரிந்தது

கதே பசுபிக் விமானத்தில் சென்று கொண்டிருந்த ஜப்பானிய பெண் ஒருவருக்கு திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, அந்த விமானம் அவசரமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு, குறித்த பெண் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

ஹொங்காங்கிலிருந்து தென்னாபிரிக்க நகரான ஜொகன்னஸ்பேர்க்கிற்கு சென்று கொண்டிருந்த இந்த விமானத்திலேயே ஜப்பானியப பெண் பிரஜையான மிக்கோகோ கோட்டோ (வயது-36) தனது கணவருடன் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போதே இவருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டது. இதனையடுத்து உடனடியாகவே விமானம் அவசர மருத்துவ தேவைக்காக கொழும்பு விமான நிலையத்தில் தரையிறங்கவுள்ளதாக அதிகாரிகளுக்குத் தெரிவித்து தரையிறங்கியது.

இதனையடுத்து குறித்த பெண் உடனடியாகவே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும், அங்கு அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணையை நடத்திய பாசில் தெசேரா - குறித்த பெண்ணிண் நுரையீரலில் இரத்தம் கட்டியானதே இந்த உயிரிழப்புக்குக் காரணமெனத் தெரிவித்தார்.

நுரையீரலில் இரத்தம் கட்டியடைவதற்கான காரணம் தமக்கு தெரியவரவில்லையென வைத்தியர்கள் தெரிவித்த அதேவேளை, அந்தப் பெண் விமானத்தில் பறப்பை மேற்கொண்டிருந்தவேளை இந்த நிலை ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

## 18 கோரிக்கைகளை முன்வைத்து அஞ்சல் ஊழியர்கள் வேலைநிறுத்தம்

### டிசம்பர் 26 முதல் ஆரம்பம்

(கொழும்பு)

18 கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 26 ஆம் திகதி நள்ளிரவுமுதல் அஞ்சல் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

அஞ்சல் தொலைத்தொடர்பு அதிகாரிகளின் சங்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

நாடு முழுவதும் செயற்படுத்தப் படவுள்ள இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில், அஞ்சல் திணைக்களத்தின் அனைதது ஊழியர்களும் ஒன்றிணைவார்கள் எனச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டி.எஸ். வீரசேகர தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவுக் கொள்வனவில் 1000 ரூபா வரையான அதிகரிப்பு, சொத்துகளுக்கான கடன், வெற்றிடங்களை முழுமையாக நிரப்பல் உட்படப் பதினெட்டுக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதுடன், உடனடியாக இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு அஞ்சல் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கச் செயலாளர் கடித மூலம் தெரிவித்துள்ளார்.

## அம்பேபிட்டிய கொலையுடன் தொடர்புடைய பொலிஸ் உயர் அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டனர்

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை தொடர்பாக, விசாரணை மேற்கொண்டு வந்த விசேட குற்றப்புலனாய்வுத்துறையினர் பாதாள உலக கோஷ்டியுடன் தொடர்புடைய 20 பொலிஸ் உயர் அதிகாரிகளை அடையாளம் கண்டுள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பாக, கொலையின் சூத்திரதாரியான போதைப்பொருள் வர்த்தகர் பொட்டு நௌபர் உட்பட 6 பேர் ஏற்கனவே கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத்துறையினர் தொடர்ந்துமேற்கொண்ட விசாரணைகளின் படி, 3 பிரதி பொலிஸ் மா அதிபர்களுடன் பொலிஸ் அத்தியட்சகர்கள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதம இன்ஸ்பெக்டர்கள் என இந்த 20 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்கு, தெற்கு பொலிஸ பிரிவுகளில் பணியாற்றுபவர்கள், மற்றும் பணியாற்றி வந்த இவர்களில் பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றியவர்கள், விசேட குற்றப் புலனாய்வு தலைமையகத்தில் பணியாற்றியவர்கள் மற்றும் கோட்டே, வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையங்களில் பணியாற்றி வந்த அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

இவர்கள் பற்றிய விபரங்கள் அனைத்தும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## வெளிநாட்டு புலனாய்வு பணியகத்தின் பணிப்பாளராக சூல செனிவிரட்ண!

### இராணுவ கட்டளை அமைப்பிலும் மாற்றம்

வெளிநாட்டு புலனாய்வுத்துறைப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகமாக இராணுவத்திலிருந்து அண்மையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சூல செனிவிரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த இவர், கடந்த 9 ஆம் திகதி ஓய்வுபெற்றிருந்தார். இதையடுத்து இவரை அரசாங்கம் வெளிநாட்டு புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமித்துள்ளது.

இவர் ஏற்கனவே பிரிட்டனிலுள்ள தூதரகத்தில் புலனாய்வு அதிகாரியாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் பதவி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேஜர் ஜெனரல் சூல செனிவிரட்ணவின் பதவி, ஓய்வுக்குப் பின்னர் இராணுவக் கட்டளை அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

புதிய இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இதுவரை தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை.

இவர் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். இவர் அடுத்தமாதமே நாடு திரும்புவார் என்றும், அதன் பின்னரே தனது பதவியைப் பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதி தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால - கடந்த 13 ஆம் திகதி தனது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் வகித்த தொண்டர் படைத்தளபதி பதவிக்குக் கிழக்குப் பிராந்திய இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் இராணுவத் தலைமையகத்தில் பொது அதிகாரிகளுக்கான ஆணையிடும் அதிகாரியாகவும் பதவிவகிப்பார்.

இதேவேளை, மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி - கிழக்கு இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இராணுவத் தலைமையகத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் நிசங்க விஜேசிங்க 21 ஆவது டிவிசனின் பொதுக்கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பிரிகேடியராக இருந்து, அண்மையில் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்ற ஜி.ஏ.சந்திரசிறி கூட்டுப்படை தலைமையகத்தின் பொது அதிகாரிகளுக்கு ஆணையிடும் அதிகாரியாக பதவி வகித்து வந்தார்.

மேஜர் ஜெனரல் ஏ.சந்தகிரியும் கடற்படையைச் சேர்ந்தவரும் கூட்டு நடவடிக்கை பணியக உயரதிகாரியாக பணியாற்றுபவருமான கொமடோர் திசேர சமரசிங்கவும் அடுத்த மாதம் புதுடெல்கிக்கு பயணமாகவுள்ளனர்.

இவர்கள் இந்திய தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒருவருட கற்கைநெறியை மேற்கொள்ளவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக சுகாதார சேவையினர் எச்சரிக்கை!

வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் சுகாதார சேவையினருக்கு சம்பள உயர்வு வழங்கப்படாமையை அடுத்து, அதற்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாக சுகாதாரச்சேவை தொழிற்சங்கம் எச்சரித் துள்ளது.

ஏனைய அரசாங்க தொழிற்துறையினருக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்ட போதும், 24 மணித்தியாலங்களாக சேவையாற்றும் சுகாதார சேவையினருக்கு அது வழங்கப்படாமையானது - சட்டவிரோதமாகும்.

அதேவேளை இது தொடர்பாக தாம் நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டபோதும், அதற்கு உரிய பதில் வழங்குவதில் இருந்து அவர் தம்மைத் தவிர்த்து வருவதாக சுகாதார சேவையினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

# பங்களாதேஷ் அணிக்கு எதிராக இந்தியா 540 ஓட்டங்கள் குவிப்பு



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கு எதிராக அதி களவு ஓட்டங்களைக் குவிப்பதே தமது இலக்கு என்று இந்திய அணியின் துணைக் கப்டன் ராகுல் டிராவிட் தெரிவித்திருந்த போதும் - இரண்டாவது நாளான நேற்று இந்திய அணி 540 ஓட்டங்களுக்குள் சகல விகெட்டுக்களையும் இழந்தது.

முதலில் விளையாடிய இந்திய அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 334 ஓட்டங்களை எடுத்திருந் தது. டிராவிட் 145 ஓட்டங்களுடனும், டெண் டுல்கர் 36 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

2 ஆவது நாள் ஆட்டம் நேற்று நடந் தது. டிராவிட்டும், டெண்டுல்கரும் தொடர்ந்து ஆடினார்கள். ஆட்டத்தின் முதல் பந்திலேயே டெண்டுல்கர் ஆட்டமிழந்தார். அவர் மொர்ராஸாவின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார்.

3 ஆவது விக்கெட்டுக்கு டிராவிட்டுடன் கப்டன் கங்கூலி ஜோடி சேர்ந்தார். ராகுல் டிராவிட் மிகவும் சிறப்பாக விளையாடி 150 ஓட்டங்களை எடுத்தார்.

மேலும் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டிராவிட் ஆட்டமிழந்தார். அவர் 304 பந்து களில் 24 பவுண்டரிகளுடன் 160 ஓட்டங்கள் குவித்தார். அப்போது இந்தியாவின் ஸ்கோர் 371 ஆக இருந்தது.

முகமது ரபீக்கின் அபாரமான பந்து வீச் சால் அடுத்த 3 விக்கெட்டுகள் எளிதாக சரிந் தன. அவரது பந்தில் லக்ஸ்மன் 9, தினேஷ் கார்த்திக் 11, இர்பான் பதான் 4 ஆட்டமிழந்த னர். 8 ஆவது விக்கெட்டுக்கு கங்கூலியுடன், கும்ளே ஜோடி சேர்ந்தார். மறுமனையில் இருந்த கங்கூலி பொறுப்புடன் ஆடினர்.

மதிய உணவு இடைவேளையின் போது இந்தியா 7 விக்கெட் இழப்புக்கு 413 ஓட்டங் கள் எடுத்திருந்தது. கங்கூலி 39 ஓட்டங் களுடனும், கும்ளே ஓட்டங்கள் எடுக்காமலும் ஆடிக் கொண்டிருந்தனர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு கங்கூலியும், கும்ளேயும் தொடர்ந்து ஆடினார் கள். கங்கூலி 88 பந்துகளில் 6 பவுண்டரியு டன் 50 ஓட்டங்களை எடுத்தார். கும்ளே 23 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது ஆட்டம் இழந்தார். அப்போது ஸ்கோர் 465 ஆக இருந்தது.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த கப்டன் கங்கூலி சதம் அடிப்பார் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் 88 ஓட் டங்களில் ஆட்டமிழந்தார். 153 பந்துகளில் 9 பவுண்டரியுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

கடைசியாக ஹர்பஜன்சிங் ஆட்டமிழந் தார். அவர் 43 பந்தில் 7 பவுண்டரி, 2 சிக் சருடன் 47 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்திய அணி 148.2 ஓவரில் 540 ஓட் டங்கள் குவித்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பங்களாதேஷ் சார்பாக முகமது ரபீக், மொர்ராசா, நஜ்மூல் முறையே 4, 3, 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். பின்னர் முதல் இனிங்சை பங்களாதேஷ் ஆடியது. 48 ஓட்டங்கள் இருக்கும் போது கும்ளே வீசிய பந்தில் ஜாவிட் ஒமர் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். பின்னர் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த நபீஷ் இக்பால் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்பஜன்சிங் பந்தில் அவுட் ஆனார்.

அடுத்து ஆடவந்த மொர்ராஷா 4 ஓட்டங் கள் எடுத்த நிலையில் ஆட்டநேர முடிவில்



கும்ளேயின் பந்தில் வெளியேறினார்.

இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் பங் களாதேஷ் முதல் இனிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 54 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டநேரம் முடிவடைந்தது.

# அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தோல்வியை நோக்கி பாகிஸ்தான்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலா வது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்களைப் பெற்ற நிலை யில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

நேற்றுமுன்தினம் இரண்டாவது இனிங் ஸில் ஆட ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

நேற்று ஆட்டம் தொடங்கியதும் லாங்கர்- ஹைடன் ஜோடி வெகுவிரைவாகவே பாகிஸ் தான் அணியின் பந்துவீச்சாளர் அக்தரால் பிரிக்கப்பட்டது.

ஹைடன் 10 ஓட்டங்கள் மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து பொண் டிங் களமிறங்கினார். லாங்கர் - பொண்டிங் ஜோடி அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித் தது. இதனால் அணியின் ஸ்கோர் 191 ஆக உயர்ந்தது. அப்போது லாங்கரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

அவர் 145 பந்துகளில் 14 பவுண்டரி களுடன் 97 ஓட்டங்களைப் பெற்று சதமடிக்கும வாய்ப்பைப் பறிகொடுத்தார். தொடர்ந்து மார்ட்டின் களமிறங்கி பொண்டிங்குடன் இணைந்து அபாரமாக ஆடினார்.

இருவரும் இணைந்து அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோரை வெகுவாக உயர்த்தி னர். ஸ்கோர் 271 ஆக உயர்ந்தபோது பொண்டிங்கின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

அவரும் 98 ஓட்டங்களைப் பெற்று சதமடிக்கும் வாய்ப்பைத் தவறவிட்டார். இவர் 176 பந்துகளில் 13 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

அதேநேரம் மார்ட்டின் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்க மறுமுனையில் வந்த லீமன் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இவரைத் தொடர்ந்து கிளார்க் களமிறங் கினார். அவரும் 42 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழந் தார்.

இதையடுத்து கில்கிறிஸ்ட் களம் இறங்கியபோதும் - அவருக்கு துடுப்பெடுத் தாடும் வாய்ப்புக் கொடுக்காமலேயே மறு முனையில் இருந்த மார்ட்டின் சதமடித்த துடன் அவுஸ்ரேலிய அணி டிக்ளேர் செய்தது.

5 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்கள் என்ற நிலையில் அவுஸ்ரேலியா டிக்ளேர் செய்திருந்தது. மார்ட்டின் 121 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தார்.

563 ஓட்டங்களைப் பெற்றாலே வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 6 ஓவர்கள் மட்டுமே விளையாடிய நிலையில் ஒரு விக்கெட்டை இழந்து 18 ஓட்டங்களை மட்டும் பெற்றுள் ளது.

## அக்தருக்கு அபராதம்

கிரிக்கெட் விதிகளை மீறியதாகத் தெரி வித்து அக்தருக்கு 40 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய-பாகிஸ்தான் அணிகள் மோதிவரும் முதல் டெஸ்ட் போட்டி பேர்த் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டி களில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்




சொகைப் அக்தர் 5 விக்கெட்டுக்கள் கைப் பற்றினார்.

அவுஸ்ரேலிய தொடக்க வீரர் ஹைடனை ஆட்டம் இழக்கச் செய்ததும் அவரை நோக்கி கையை நீட்டி பெவிலியனுக்கு போகும்படி அக்தர் சைகை செய்தார்.

இதனால் கிரிக்கெட் விதிகளை மீறிய தாகக் குற்றங்கூறி அவருக்கு 40 சதவீத அபராதம விதிக்கப்பட்டுள்ளது. போட்டி நடுவரான ரஞ்சன் மடுகல்ல இந்த நடவ டிக்கையை மேற் கொண்டார்.

இதுபற்றி அக்தர் கூறும்போது, நான் எந்த உள்நோக்கத்துடனும் இதுபோல் செய்யவில்லை. உணர்ச்சி வேகத்தில் அப்படிச் செய்துவிட்டேன் என்றார்.




## இந்திய வீரர் டிராவிட்

# அனைத்து டெஸ்ட் நாடுகளிலும் சதமடித்து உலக சாதனை!

பங்களாதேஷுக்கு எதிராக சிட்டஹொங் கில் நேற்றுமுன்தினம் தொடங்கிய 2 ஆவது டெஸ்டில் ராகுல் டிராவிட் சிறப்பாக விளை யாடி சதம் அடித்தார். இதன்மூலம் அவர் புதிய உலக சாதனை படைத்தார். டெஸ்ட் போட்டியில் விளையாடும் அனைத்து நாடு களிலும் அவர் சதமடித்து உள்ளார். வேறு எந்த வீரரும் அனைத்து நாடுகளிலும் சதம் எடுத்தது கிடையாது.

டிராவிட் இந்தியாவில் 6 சதமும், இங்கி லாந்தில் 3 சதமும், நியூஸிலாந்தில் 2 சதமும், அவுஸ்ரேலியா, பாகிஸ்தான், தென் னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை, சிம்பாப்பே, பங்களாதேஷ் ஆகிய நாட்டில் தலா ஒரு சதமும் அடித்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் விளையாடும் அனைத்து நாடுகளுக்கு எதிராக சதம் அடித்த 4 ஆவது வீரர் என்ற பெருமையை டிராவிட் பெற்றார். ஹேர்ஸ்ரன் (தென்னாபிரிக்கா), ஸ்ரீவ் வோ (அவுஸ்ரேலியா), டெண்டுல்கர் (இந்தியா) ஆகியோர் அனைத்து நாடுக ளுக்கு எதிராகவும் சதம் அடித்து உள்ளனர்.

டிராவிட்டின் நேற்றுமுன்தின சதம் 18 ஆவது சதமாகும். இதன் மூலம் அதிக



சதமடித்த இந்திய வீரர்களில் 4 ஆவது இடத்தைப் பிடித்தார். கவாஸ்கர், டெண்டுல் கர் ஆகியோர் தலா 34 சதமும், அசாருதீன் 22 சதமும் அடித்துள்ளனர்.

# இங்கிலாந்துடனான டெஸ்ட் தென்னாபிரிக்க அணி 7/ 273



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் முதல் டெஸ்ட் போட்டியில் ஆடிவருகிறது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் ஸ்மித் இரண்டு பந்துகளை மட்டுமே எதிர்கொண்ட நிலையில் எந்த ஓட்டத்தையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

அணியின் ஸ்கோர் 0 ஆக இருந்தநிலை யில் முதல் விக்கெட்டை பறிகொடுத்ததால் தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அடுத்து டி.வில்லியர்ஸ்ஸுடன் ரூடொல்ப் இணைந்து கொண்டார்.

இந்த ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங் களைக் குவித்தது. அணியின் ஸ்கோர் 63 ஆக இருந்தபோது டி.வில்லியர்ஸ் பிளின் ரொப்பின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

வில்லியர்ஸ் 47 பந்துகளில் 4 பவுண்டரி களுடன் 28 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்த தாக கலிஸ் களம் இறங்கியபோதும் 7 பந்துகளை எதிர்கொண்ட அவரால் ஒரு ஓட்டத்தைக்கூடப் பெறாமல் டக் அவுட்டானார்.

இதையடுத்து ரூடொல்புடன் டிப்பென்னர் களம் இறங்கினார். இவர்கள் இருவரும் இணைந்து அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். ஆனாலும் அணியின் ஸ்கோர் 178 ஓட்டங்களாக உயர்ந்தபோது ரூடொல்ப் ஆட்டமிழந்தார்.

ரூடொல்ப் 192 பந்துகளில் 14 பவுண்டரி களுடன் 93 ஓட்டங்களைப்பெற்றார். இதன் பின்னர் புருன் ஆட்டத்தைத் தொடர்ந்தார். ஆனால் அவரும்கூட ஆறு ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில், பிளின்ரொப்பின் பந்துவீச்சில் போல்டானார்.

அணியின் ஸ்கோர் 192 ஆக இருந்த போது ஆறாவது விக்கெட்டாக பொலக் ஆடவந்தார். இவர் சிறிது நேரம் நின்று பிடித்து நிதானமாக ஆடி அணியின ஸ்கோரை உயர்த்தினார்.

ஆனால் பொலக்கின் விக்கெட்டை ஹொகாட் வீழ்த்தியதால் தென்னாபிரிக்க அணி மேலும் நெருக்கடிக்குள் தள்ளப் பட்டது. 52 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்களைப் பொலக் பெற்றிருந்தார்.

அடுத்து ஹோல் களமிறங்கினார். ஆனால் அவரால் வெறும் ஆறு ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதனால் சோலேகிலி ஆட்டத் தைத் தொடர்ந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஆட்டம் இடை நிறுத்தப்பட்டபோது டிப்பென்னர் மற்றும் சோலேகிலி ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டிப்பென்னர் 193 பந்துகளில் 8 பவுண்டரி களுடன் 79 ஓட்டங்களையும் சோலேகிலி 6 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

முதல்நாள் ஆட்டமுடிவில் 7 விக்கெட் இழப்புக்கு தென்னாபிரிக்க அணி 273 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 24 ஓட்டங்கள் உதிரிகள் என்பது குறிப்பிடத் தக்கது.

பந்துவீச்சில் ஹொகாட், பிளின்ரொப் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் ஹர்மிசன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# குடாநாட்டு புற்றுநோய் நிலையங்களில் 24ஆம் திகதிமுதல் சிகிச்சைகள் ஆரம்பம்

சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனைக் குட்பட்ட பிரிவில் இயங்கும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்துக்கும், யாழ்.போதனாவைத்தியசாலைக்கும் புற்றுநோய் சம்பந்தமான நிபுணத்துவ சேவையை வழங்க டொக்டர். ந.ஜெயக்குமார் கடந்த 14 ஆம் திகதி முதல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதிமுதல் அவரின் சேவை திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் புதன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிலும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் முதற்கட்டமாகப் புற்றுநோயை இனம்காண்பதுடன், கதிரியக்கமில்லாத ஏனைய சிகிச்சை அனைத்தும் மேற்கொள்ளப்படும். விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறும் வசதியும் யாழ்.போதனாவைத்தியசாலையில் 21 ஆம் திகதி செவ்வாய்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் கதிரியக்கச் சிகிச்சை நிலையத்துக்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கதிரியக்கம் வழங்கும் கோபால்ட் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதைப் பொருத்தி இயங்கச் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் சித்திரை மாதத்தில் பூர்த்தியடையும்.

இதுவரைகாலமும் கொழும்பு சென்றுதான் புற்றுநோய் சம்பந்தமான சிகிச்சை பெறும நிலை இருந்தது. இந்த நிலை படிப்படியாக மாறி, வட-கிழக்குப் பகுதியில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு இந்த நிலையம் அடுத்த வருட நடுப்பகுதியில் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் - சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணித் தொகுதியிலுள்ள சுருக்கெழுத்தாளர் (தமிழ்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் கோரியுள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழியில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அல்லது தேசிய கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் தமிழ் மொழியில் விசேட சித்தியுடன் எட்டுப்பாடங்களில் சித்திபெற்ற 22-45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

ஒரு மொழிக்கு மேலான மொழிகள் மற்றும் கணினி அறிவு இருத்தல் மேலதிக தகைமைகளாக கணிக்கப்படும் எனவும், சுருக்கெழுத்து மொழிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக் கூடாக நியமனம் வழங்கப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தகுதியானவர்கள் எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை நாடாளுமன்ற செயலாளர் நாயகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கோட்டே என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் இந்த மாதம் 17 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும். (31)

# அங்கீகாரமின்றி கட்டப்பட்ட கட்டடத்தை அகற்ற உத்தரவு

யாழ்.மாநகரசபையின் அனுமதியின்றி அரசடி வீதி, நல்லூரில் அமைக்கப்பட்ட கடை கட்டடத்தை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு கட்டட உரிமையாளருக்கு யாழ்.நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வீதி எல்லைக்கோட்டுக்குள் வரும் இந்தக் கடையின் பகுதியை கட்டட உரிமையாளர் தாமே உடைத்து அகற்றவேண்டும். அகற்றத் தவறும் பட்சத்தில் மாநகரசபை அகற்றலாம். அகற்றும் செலவை சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளர் மாநகர சபைக்குச் செலுத்தவேண்டும்.

மேலும் கடந்த மாதமும் பிறவுண் வீதியின் அங்கீகாரமின்றி கட்டடப்பட்ட கட்டத்தை அகற்றும் படி நீதிமன்றத்தால் உத்தரவிடப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஏற்கனவே அங்கீகாரமின்றி கட்டடப்பட்ட கட்டத்தை அகற்றுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றில் வழங்கப்பட்ட கட்டளைக்கு எதிராக எதிராளியால் செய்யப்பட்ட மேன்முறையீட்டு வழக்கு - இடைநடுவே எதிராளியால் வாபஸ் பெறப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# செலான் வங்கியின் உதவியுடன் விவசாயிகளுக்கு கடன் வசதி

யாழ்.மாவட்ட கமநலசேவை திணைக்களம், செலான் வங்கியுடன் இணைந்து விவசாயிகளுக்கு தூவல் நீர்ப்பாசன இயந்திரங்களை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உரும்பிராய், புத்தூர், உடுவில், கீரிமலை, புலோலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நான்கு பரப்பு வயல் நிலமும், நீர் இறைக்கும் இயந்திரமும் உள்ள விவசாயிகள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிப்பவர்களில் தெரிவு செய்யப்பட்ட 100 விவசாயிகளுக்கு முதற்கட்டமாக 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தூவல் நீர்ப்பாசன இயந்திரங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளும் விவசாயிகள் இரண்டுவருடத்துக்குள் தவணை அடிப்படையில் கடனை மீளச்செலுத்த வேண்டும். இந்த தூவல் நீர்ப்பாசனத்தைப் பயன்படுத்துவதன்மூலம், எமது நிலக்கீழ் நீர் ஊற்றின் அளவை பாதுகாப்புடன், நீரின் தன்மையையும் மாறுபடாது பாதுகாக்க முடியும்.

இதன் மூலம் விவசாயிகள் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். எனவே இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறு யாழ். கமநல சேவை உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் பயிற்சி

அரசதுறைகளில் கடமையாற்றும் இணைந்தசேவை உத்தியோகத்தர்கள் ஜனவரி முதலாம் திகதி முதல் முகாமைத்துவ உதவியாளர்களாக பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பம் கோரும் படிவம் ஒன்று யாழ்.செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரசசேவையில் உள்ள எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், கணக்குப் பதியுநர், களஞ்சியக் காப்பாளர்கள் ஆகிய இணைந்த சேவை உத்தியோகத்தர்களே முகாமைத்துவ உதவிச் சேவையாளர்களாக ஆறுமாத காலமாக பயிற்றுவிக்கப்படுவதுடன், இவர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்ப படிவம் யாழ்.செயலகத்துக்கு அனுப்பப்பட்டு, ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

# நாயன்மார்கட்டில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு குளத்தடிப் பிள்ளையார் கோவிலைச் சூழவுள்ள வீதிகளில் பெருமளவு குப்பைகள் மற்றும் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதால், அந்தப் பகுதி மிகவும் மாசடைந்து வருவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அரியாலை மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து மாநகரசபையால் சேகரிக்கப்படும் குப்பைகள், கழிவுப் பொருட்கள் பெருமளவு இந்தப்பகுதியில் குவிக்கப்படுகிறது. இதன்காரணமாக இவை மலை போல் இருப்பதால், துர்நாற்றம், சுகாதாரச் சீர்கேடுகள், நுளம்புப் பெருக்கம் மற்றும் விஷ ஜந்துக்களின் பெருக்கம் போன்றவற்றுக்கும் காரணமாக அமைவதோடு, வீதிப் போக்குவரத்துக்கும் தடையாகவுள்ளது.

இதேவேளை சலூன்களிலிருந்து சேகரிக்கப்படும் தலைமயிர்களும், மற்றும் வீட்டுக் கழிவுப்பொருடகள் போன்றவையும் இந்தப் பகுதியிலேயே கொட்டப்படுகிறது. இவை குறித்து யாழ்மாநகரசபை கவனத்தில் கொள்ள வேண்டும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(55)

## சின்னஞ்சிறு செய்திகள்

### குன்றும் குழியுமாக காணப்படும் கலட்டிச் சந்தி

(சுதுமலை)

இராமநாதன் வீதி கலட்டிச் சந்தியில் நீண்ட தூரத்துக்குப் பாரிய குழிகள் தோன்றியுள்ளதால், பாதசாரிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

வீதி புனரமைப்புக்கென இரு பக்கமும் கற்கள் குவித்துள்ளதாலும் இந்தப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன. (91)

### கே.கே.எஸ்.வீதி திருத்தப்பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மையப்பகுதியில் சத்திரத்துச் சந்திப் பகுதியின் கே.கே.எஸ். வீதியின் இருபுறமும் திருத்தப்பட்டு வருகின்றன.

நகரின் முக்கிய சந்திப் பகுதியான இந்த வீதியின் இருபுறமும் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன, குன்றும் குழியுமாக இந்த வீதி காணப்படுவதால், வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகவும் சிரமத்துடனேயே போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பருவமழை காரணமாக இந்தப் பள்ளங்களில் மழை நீர் தேங்கி பெரும் சிரமத்தை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### சிவநேசன் எம்.பி. உதவி

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்துக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கை மூலம் முற்றாக அழிவடைந்து, பின்னர் மீளக்கட்டப்பட்டு, பூர்த்தியாக்கப்படாத நிலையிலுள்ள பாலர் பாடசாலைக் கட்டடத்தின் கட்டும் பணி இந்த நிதியைக் கொண்டு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (55)

### ஆஞ்சநேயர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை

மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் வருடாந்த "இலட்சார்ச்சனை" எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நடைபெறவுள்ள இந்தத் தினங்களில் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பக் கிரியைகளும், தொடர்ந்து 10 தினங்கள் இலட்சார்ச்சனையும், 11 ஆம் நாள் சனிக்கிழமை ஹனுமன் ஜயந்தி விழாவும், அன்றையதினம் அடியவர் நேர்த்திக்கடன் தீர்த்தலுக்காக விஷேட பொங்கல் பூசைகளும் நடைபெறும்.

இலட்சார்ச்சனை பூர்த்திவிழாவன்று விசேட நிகழ்வுகளும், சிறப்பு நிகழ்வுகளாக "சங்கீத இசைக்கச்சேரி", "நாட்டியாஞ்சலி நிகழ்வு", வயலின் இசைக்கச்சேரி போன்ற கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (82)

### சனசமூக நிலையம் திறந்துவைப்பு

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட பிரான்பற்றில் கலைமகள் சனசமூக நிலையம் கடந்த புதன்கிழமை புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளர் செரமேஸ் கலைமகள் சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்தார். (91)

### பயிற்சிப் பட்டறை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில்- பாடசாலை மட்டத் திட்டமிடல் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் அதிபர், உபஅதிபர், ஆசிரியர் ஒருவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (122)

### அதிபர் நியமனம்

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமை புரிந்த மு.நாகேந்திரராசா என்பவரே இநதப் பாடசாலையின் புதிய அதிபராக வலயக் கல்வித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாடசாலையில் முன்னர் அதிபராகக் கடமைபுரிந்த எம்.சிறீஸ்கந்தராசா சுகயீனம் காரணமாக மரணமானதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய அதிபர் நியமிக்கப் பட்டுள்ளார். (122)

# அரியாலை பார்வதி வித்தியாலயத்தில் லயன்ஸ் கழக இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அரியாலை வாழ் மக்களின் நன்மை கருதி, யாழ்.லயன்ஸ் கழகம் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்த முன்வந்துள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறும்.

கண் பரிசோதனை உட்பட சகல நோய்களுக்குமான ஆலோசனை சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

அரியாலை வாழ்மக்கள் அனைவரையும் இந்த இலவச மருத்துவ முகாம் மூலம் பயன் பெறுமாறு அரியாலை அபிவிருத்திச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உபபணிமனைக் கட்டடத்தை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைக் காணலாம். (21)

# தவறுகள் குற்றங்கள் அல்ல

உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை 5 முறை வென்று சாதனை படைத்த பிரேசில் நாட்டவர்களுக்கு, சோதனையாக சமீபத்தில் இருவீரர்கள் மரணமடைந்த சம்பவம் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தமாத ஆரம்பத்தில் பெங்களூரில் நடைபெற்ற பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கோவாவின் டெம்போ ஸ்போர்ட்ஸ் கிளப் அணியும், கொல்கத்தாவின் மோகன் பகான் அணியும் மோதியிருந்தன. இதில் டெம்போகிளப்பின் வெற்றிக்குக் காரணமாக இருந்த பிரேசில் வீரர் கிறிஸ்டியானோ ஜூனியர் மைதானத்திலேயே வீழ்ந்து மரணமானார்.



அந்த இறுதி நிமிடம்

இவ்வாறே சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரேசிலில் நடைபெற்ற சம்பியன் கிண்ணப் போட்டியொன்றில் உள்ளூர் அணிகளான சாபவுலோ - கேட்னோ அணிகள் மோதியிருந்தன. இந்தப் போட்டியிலும், கேட்னோ அணியின் களத் தடுப்பு வீரர் செர்கின் கோ மைதானத்திலேயே மயங்கி வீழ்ந்து மரணமடைந்தார்.

இந்த இரண்டு வீரர்களும் மாரடைப்பால் மரணமடைந்தார்கள் என்று பிரேத பரிசோதனை மூலம் தெரியவந்தாலும், ஒரு பிள்ளையின் தந்தையான செர்கின் கோவின் மரணத்தில் எந்தவித சந்தேகமும் ஏற்படவில்லை. ஏனென்றால், அவர் ஏற்கனவே இருதயநோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்தவர் என்பது விசாரணையின்போது தெரியவந்தது. ஆயினும் இருதயநோயுடைய ஒருவரின் உடற்தகுதியைச் சோதித்துப் பார்க்காமல் எவ்வாறு அவரை விளையாட அனுமதித்தார்கள் என்பதுமட்டும் கேள்விக்குறியாகவுள்ளது.

ஆனால், கிறிஸ்டியானோவின் மரணத்தில்தான் சந்தேகம் வலுக்கிறது. போட்டியின்போது மோகன் பகான் கோல்கீப்பர் சுப்ரதோ கோல் அடிக்கவந்த கிறிஸ்டியானோ மீது முரட்டுத்தனமாக மோதியதாலேயே மரணம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. அதனால் சுப்ரதோ மீது அகில இந்திய உதைபந்தாட்ட சம்மேளனம் தற்காலிகத் தடைவிதித்தது.

இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயம், இந்தக் குற்றச்சாட்டை டெம்போ கிளப் வீரர்கள் முன்வைக்கவில்லை. இந்தியாவின் புகழ்பெற்ற உதைபந்தாட்ட வீரரான பூட்டியாவே முதலில் சர்ச்சை கிளப்பியிருந்தார்.

முன்னொரு சமயம் ஈஸ்ட் பெங்கால் அணிக்கு எதிரான தூரந்த் கிண்ண இறுதிப்போட்டியில் ஜெர்மையா என்ற வீரரைத் தாக்கியதை நினைவிற்கொண்டு, அவ்வாறே சுப்ரதோ இதையும் செய்திருக்கிறார் என்று அனுமானத்தின் அடிப்படையில் பூட்டியா குற்றஞ்சாட்டியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல.

எதிரணி வீரர் கோல் அடிக்க வரும் நேரத்தில், அதிலும் தடுப்பதற்கு ஒன்றுமே செய்ய இயலாத ஒரு கட்டத்தில் கோல் கீப்பர் முறைதவறி நடத்தல் என்பது சில சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாமல் நிகழ்வது தான். அவ்வாறே சுப்ரதோவும் கோலைத் தடுக்கும் ஒரே நோக்கம் கருதியே செயற்பட்டிருக்கவேண்டும். மாறாக கிறிஸ்டியானோவைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கில் அவர்மீது மோதியிருக்கமாட்டார்.



பயணம் முடிந்ததம்மா

விளையாட்டின் அடிப்படை அம்சமே வெற்றி தோல்வியைச் சகஜமாக ஏற்றுக்கொள்வதும் பொறாமை, வன்முறை போன்ற எண்ணங்களைக் களைந்து வீரர் ஒருவரை ஒழுக்கம் வாய்ந்தவராக மாற்றுவதுமேயாகும். மாறாக இந்தமாதிரியான கீழ்த்தரமான எண்ணங்களை உண்மையிலேயே ஒரு வீரர் கொண்டிருப்பாரேயானால், அவரை ஒரு சிறந்த வீரராக ஏற்றுக்கொள்ள முடியாது. எது எப்படியோ இந்த விடயம் சுப்ரதோவுக்கு மட்டும்தான் வெளிச்சம்.

இதுபற்றி எதுவும் கருத்துக் கூறாத டெம்போ கிளப் வீரர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லாததே காரணம் என்று குறை கூறியிருக்கின்றார்கள். மறுபுறம் பிரேத பரிசோதனை அறிக்கை - களத்தில் கடினமாக உழைத்ததும், அளவுக்கு அதிகமாகப் பதற்றமடைந்ததும்தான் கிறிஸ்டியானோவுக்கு மாரடைப்பு ஏற்படக் காரணம் என்று கூறுகின்றது.

இந்த நிலையில் கிறிஸ்டியானோவின் உடலை இரண்டாவது முறையாகப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று அவரது மனைவி, கோவா மாநில அரசை கோரியிருந்தார். ஆனால் அதை ஏற்க அரசு மறுத்துவிட்டது.

இதன் மூலம் கிறிஷ்டியானோவின் மரணத்துக்கு மாரடைப்பு காரணம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் சுப்ரதோ மீதான தற்காலிகத் தடையும் விரைவில் விலக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

- விமலன்.

# விளையாட்டு அரங்கம்



# மீண்டெழும் கனவுகள்



காதல் மட்டும் வாழ்க்கையல்ல
வேதனையில் ஹெவிட்

அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள் என்பார்கள். சிலமாதங்களுக்கு முன்பு வரை ரெனிஸ் உலகில் மிகவும் கலகலப்பாகப் பேசப்பட்ட விடயம் கிம்கிளிஸ்டர்-லேய்டன் ஹெவிட் திருமண விவகாரம். திருமணம் இந்தா அந்தா என்று இருந்த வேளையில் திடீரென்று கிம்கிளிஸ்டர்ஸ் தான் ஹெவிட்டை மணக்கப் போவதில்லை என்று அதிரடி அறிக்கை ஒன்றை விட்டார். இந்தச் செய்தி ரெனிஸ் உலகில் பெரும் வியப்பையும் கவலையையும் ஏற்படுத்தியது.

இப்பொழுது காலம் மாறுகிறது. எதிர்காலம் எல்லோரையும் எதிர்கொள்கிறது. அதுவும் புதிய வருடம் அண்மித்து விட்டது. 2005 ஜனவரி 17 இல் அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் (2005 ஆம் வருடத்தின் முதல் GRAND SLAM) போட்டிகள் ஆரம்பிக்கப் போகின்றன. இந்நிலையில் அவுஸ்ரேலியரான ஹெவிட்டின் மனநிலை எப்படி இருக்கப் போகிறது. தனது மனதைத் தேற்றிக் கொண்டு மீண்டும் ஒரு ரெனிஸ் வீரராக புனர்ஜென்மம் எடுக்கப் போகிறாரா அல்லது கடந்த சோகங்களில் மூழ்கிக் கிடக்கப் போகிறாரா? ஹெவிட்டின் தங்கை ஜஸ்லின் நம்பிக்கையுடன் இருக்கிறார் - அண்ணா எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய நிலையில் இல்லை. ரெனிஸ் களத்தில் அவர் ஒரு ரெனிஸ் வீரர் மட்டுமே. வெல்வதையே குறிக்கோளாகக் கொண்டவர். அவரது இலக்கில் இருந்துமாறமாட்டார் என்று கூறியிருக்கிறார்.

கடந்த ஜனவரியில் ஹெவிட் நான்காவது சுற்றில் அவுஸ்ரேலிய ஓபன் போட்டிகளில் இருந்து அகற்றப்பட்டார். இதனால் முதல் பத்து இடங்களுக்கு அப்பால் சென்ற இவர், இப்போது மூன்றாவது இடத்தில் இருக்கின்றார். ஆனால் திருமண விடயம் முறிவடைந்த பின் நடைபெற இருக்கும் முக்கியத்துவம் பெற்ற போட்டிகள் அவுஸ்ரேலிய ஓபன் போட்டிகளாகும். இந்தப் போட்டியில் ரெனிஸ் ரசிகர்களின் பார்வை முழுவதும் அவர்மீதே இருக்கும். அதைவிட ஊடகவியலாளர்களின் பார்வையும் அவரை அந்த விடயம் சார்ந்த வகையிலே நோக்கும். இந்த நிலையில் ஹெவிட் தன்னை எவ்வாறு நிலை நிறுத்திக் கொள்ளப் போகிறார் என்பதே கேள்வி. ஹெவிட்டின் பயிற்றுனர் மக்னமாரா கருத்துக் கூறுகையில் - இந்த வருடம் ஹெவிட்டுக்கு மிகத்துன்பமான வருடம்தான். இருந்தாலும் நடந்ததெல்லாம் கடந்துபோக அவர் அவுஸ்ரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகளுக்குத் தன்னைப் பூரணமாகத் தயாராக்கிக் கொள்வார் என்றே எண்ணுகின்றேன். அவுஸ்ரேலிய ஓபன் வெற்றிக் கிண்ணத்தை வெல்லும் சகல தகுதிகளும் ஏனையோரைப் போலவே இவருக்கும் உண்டு என்கிறார்.



கிம் கிளிஸ்ரர்ஸ் நம்பிக்கை எங்கே

போட்டிகள் நடைபெறப்போவதோ ஹெவிட்டின் தாயக மண். பெல்ஜியப் பெண்மணி ஹெவிட்டின் மனதைப் புண்படுத்தி திருமணத்தைப் புறக்கணித்தது தொடர்பில் ஹெவிட்டின் மீது அவுஸ்ரேலிய மக்களின் கரிசனை நிரம்பவே இருக்கும். அவருக்கு உள்ள ஆதரவு அபரிமிதமாக இருக்கும். இதுவே அவருக்கு ஒரு புதிய வாழ்க்கையின் திறவுகோலாகக் கூட இருக்கலாம். புதிய மனிதனாகப் பிறப்பெடுக்கப்போகும் ஹெவிட், இறுதிப் போட்டியில் சுவிட்சர்லாந்தின் ரொஜர் பெடரரைச் சந்திப்பார் என்ற ஊகம் கூட இப்பொழுதே எழுந்து விட்டது. எது எவ்வாறோ ஹெவிட் வாழ வேண்டும் வளர வேண்டும்.

-செந்தூரன்.

# நல்லதோர் வீணை

தமிழ் நாட்டு வீரர்கள் முரளி கார்த்திக் மற்றும் டினேஷ் கார்த்திக் இருவரும் இந்தியக் கிரிக்கெட் அணியில் பங்கேற்றுப் பது எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சி. அதிலும் முரளி கார்த்திக் மும்பை டெஸ்டில் அவுஸ்ரேலியாவின் தோல்வியில் மொத்தம் 7 விக்கெட்டுக்களை சாய்த்து பெரும் பங்கு வகிக்கவே அவருக்கு மவுசு ஒஹோ என்று அதிகரித்து விட்டது. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று முரளி கார்த்திக்கின் திறமையின் மீதான மகிழ்ச்சி மற்றது அவுஸ்ரேலிய அணி மண் கவ்வியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி.

28 வயதாகும் முரளி கார்த்திக் இந்திய ரயில்வேயில் வேலை பார்க்கிறார். தனது வெற்றிகளின் போதெல்லாம் தந்தையையும், மனைவியையும் தான் நினைத்துக் கொள்வேன் என்கிறார் அவர். உங்கள் வெற்றிக்கு, விசேடமான உங்கள் தலை அலங்காரம் தான் காரணமா என்று கேட்டால் தோல்வி வந்தால் அப்போது அதற்கு இந்தத் தலையலங்காரம் தான் காரணம் என்பீர்கள் என்கிறார் அவர். இந்திய கிரிக்கெட் பாரம்பரியத்துக்கு ஏற்ப நிறையவே மனச்சுமைகளுடன் வாழும் கிரிக்கெட் வீரர்களில் முரளி கார்த்திக்கும் ஒருவர்.



முரளி கார்த்திக்
இனியொரு விதிசெய்

இதுவரை கிரிக்கெட் வாழ்க்கை யதார்த்த வாழ்க்கையின் போதனைகள் அனைத்தையுமே இவருக்குக் கொடுத்திருக்கிறது. நான் கிரிக்கெட் விளையாட்டை நேசிக்கிறேன். தேசிய அணியில் இருக்கிறேனோ இல்லையோ கிரிக்கெட் விளையாடிக் கொண்டே இருப்பேன். எனவே எந்த நிலையிலும் இனிமேல் மனம் தளர்வதென்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார்.

முன்பெல்லாம் அணியில் இடம் பெற்றிருக்க வேண்டிய வேளைகளில் ஒரம் கட்டப்பட்ட வேளையில் எல்லாம் மனம் நொந்து போயிருக்கிறேன். இந்த நிமிடத்தின் இந்திய சிறந்த LEG SPIN-NER நான் தான் என்கிறார்கள். இருந்தாலும் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை. என் தந்தை, மனைவி எனக்கு நிறைய ஆறுதல் தந்துள்ளார்கள் டிராவிட் பல சந்தர்ப்பங்களில் - சில விடயங்களை நீ உன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க இயலும் ஆனாலும் சில உன் கட்டுப்பாட்டை மீறிச் சென்று கொண்டிருக்கும் என்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

வாழ்க்கையை அதன் ஓட்டத்திற்கு ஏற்ப ஏற்றுக்கொள்ள தற்போது நான் பழகிக் கொண்டேன். இனியொரு டெஸ்ட் போட்டி எனக்கில்லையென்றாலும் கூட, நான் மகிழ்ச்சி நிறைந்தவனாகவே இருப்பேன் என்கிறார். எனக்கென்று மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் ஒன்றிருக்கிறது. அதோடு என்னை நேசிக்கும் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்று திருப்திப்படுகிறார் முரளி கார்த்திக்.

முரளி கார்த்திக் முன்னாள் அவுஸ்ரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் வோவின் பரம ரசிகர். அவர் தனது கதாநாயகன் என்கிறார். ஸ்ரீவ்வோ இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியில் அவர் அவுட்டாகியதும் முரளி கார்த்திக் ஸ்ரீவ்வோவிடம் சென்று 'நீங்கள் இறுதியாக விளையாடிய டெஸ்ட் போட்டியில் நானும் அங்கத்தவனாக இருந்ததை மிகப் பெருமையாக கருதுகிறேன்' என்று கூறியிருக்கிறார். முரளி கார்த்திக்கின் எதிர்காலம் இன்னும் சிறப்புற அமையும் வகையில் அவர் திறமை வாய்ந்தவர். தொடர்ந்து சந்தர்ப்பம் பெறுகின்ற வகையில் திறமையைக் காட்டியிருக்கிறார். அவரது திறமை சரியானவர்களின் பார்வையில் விழவேண்டும். இல்லாவிட்டால் அது இந்திய அணியின் இழப்பாகத்தான் இருக்கும்.

-மக்டலின்.

# புயலுக்குப் பரிசு



ஸ்ரெபி கிராவ்
நிறம் மாறாத மலர்

மைக்கல் சூமாக்கர் என்ற பெயர் விளையாட்டு உலகில் மிகவும் பிரபல்யமானது. அதுவும் கார்ப் பந்தயங்களில் ஆர்வம் கொண்டவர்கள் இவரது சாதனைகள் பற்றி நிறையவே அறிந்திருப்பார்கள். ஜேர்மன் நாட்டின் தேசியச் சொத்து இவர் என்றால் கூட அது மிகையாகாது.

இப்போது மகிழ்ச்சிகரமான செய்தி என்னவென்றால் - இருபதாம் நூற்றாண்டின் ஜேர்மனி நாட்டின் அதிசிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் மைக்கல் சூமாக்கர். உலக சம்பியன் ஷிப் போட்டிகளில் மட்டும் ஏழு தடவை பட்டம் பெற்றவர் இவர். நான் இப்படி ஒரு கௌரவம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கவேயில்லை என்கிறார் இவர்.

கடந்த நூற்றாண்டின் சிறந்த விளையாட்டு வீரர்கள் தெரிவில் பங்கு பற்றிய நேயர்கள் ஒரு லட்சம் பேர். இந்த நிகழ்ச்சியை நடத்தியவர்கள் ZDF தொலைக்காட்சி நிறுவனத்தினர்.

இந்தப் போட்டியில் இணைக்கப்பட்ட பெயர்களுள் நாம் அறிந்த பிரபல விளையாட்டு வீரர்களின் பெயர்களும் அடங்கும். இரண்டாவது இடத்தைப் பெறுபவர் படகோட்டப் போட்டியில் 8 முறை தங்கம் வென்ற பிரிஜிட் பிஷர். முன்னாள் ரெனிஸ் நட்சத்திரம் ஸ்ரெபி கிராவ் மூன்றாவது இடத்தையே பெற முடிந்திருக்கிறது. உலகக் கிண்ண உதைபந்தாட்டம் வென்றவரும் ஜேர்மனி அணித்தலைவருமான பிரோன்ஸ் பெக்கன் பேர் நான்காவது இடத்தையும் ரெனிஸ் வீரர் பொரிஸ் பெக்கர் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளார்கள். மற்றும் உதைபந்தாட்ட வீரர் ஜெராட் முலர் ஒன்பதாவது இடத்தையும் ஜேர்மனியின் தற்போதைய உதைபந்தாட்ட கோல்காப்பு வீரர் ஒலிவர் ஹான் பத்தாம் இடத்தையும் பெற்றுள்ளார். இன்னும் பலர் பின் வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இதிலே உதைபந்தாட்ட வீரர்கள் கூடுதலாக இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.



மைக்கல் சூமாக்கர்
ஆரிய சக்கரவர்த்தி

இந்தத் தெரிவில் தனி நபர் விளையாட்டு வீரர்களும், குழு விளையாட்டு வீரர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். நிறைந்த விளையாட்டுக்களும் அதில் உயர் திறமையும் கொண்ட எவ்வளவோ விளையாட்டு வீரர்கள் இருக்கும் நிலையில், தனிநபர் விளையாட்டுடன் தொடர்பு கொண்ட என்னை முதன்மையாகத் தெரிவு செய்தமை பெரிதும் மகிழ்ச்சிக்குரியதென்கிறார் சூமாக்கர்.

- ஜூலியா.

# பார்வைகள் பலவிதம்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தற்போது சிறிது இறங்குமுகமாகச் சென்று கொண்டிருப்பது அவதானிக்கப்பட்ட விடயம்தான். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் முன்னாள் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் வீரர் கிளைவ் றைஸ் இதற்குக் கூறும் காரணம் வேறாக அமைகிறது. தென்னாபிரிக்க இனவாதம் வெள்ளையின வீரர்களை நாட்டைவிட்டே துரத்திக்கொண்டு இருக்கிறது என்றும், இனவாதம் மறுவளமாக இப்போது தென்னாபிரிக்காவில் செயற்படுகின்றது என்றும் ஆக் ரோஷமாகக் கூறியிருக்கிறார்.



கிளைவ் றைஸ்
கண்ணீர் நியாயமானதா?

அண்மையில் சிம்பாப்வே விஜயம் செய்த இங்கிலாந்து அணியின் ஒரு வீரர் கெவின் பீட்டர்ஸன். இவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவர். இங்கிருந்தால் சரிவராது என்று இங்கிலாந் திலுள்ள நோட்டிங் ஹம்ஷயர் அணியில் இவரைச் சேர்த்துவிட்டவர் கிளைவ் றைஸ். இப்போது கெவின் இங்கிலாந்தின் தேசிய அணிவீரர். அண்மைக்காலமாக நிறையவே வெள்ளை யின வீரர்கள் தென்னா பிரிக்காவை விட்டு வெளி யேறிக்கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் நடவ்டிக்கைதான் என்றும், இதனால் கிரிக்கெட்டின் தரம் பாழ்பட்டுப் போவதாகவும் கிளைவ் றைஸ் ஆதங்கப்படுகிறார்.

ஆரம்பத்தில் இருந்த கோட்டா முறைக்கு எதிர்ப்புக் கிளம்பவே இரண்டு வருடங்களுக்கு முன் அந்த முறைமை நீக்கப்பட்டது. அந்த நிலையில் திறமையின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்போது வெள்ளையின வீரர்களே கூடுதலாகத் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியில் இடம்பிடிக்கும் சாத்தியம் அதிகம். ஆனால், தற்போது கலப்பின மற்றும் கறுப்பின வீரர்கள் தேசிய அணிக்குள் உள்வாங்கப்படக் காரணம் தென்னாபிரிக்கக் கிரிக்கெட்சபையின் மறைமுகமான கோட்டா முறையொன்றைப் பின்பற்றுவதுதான் என்று குற்றஞ்சாட்டுகிறார். தென்னாபிரிக்கக் கிரிக்கெட்சபை இப்பொழுது வெள்ளை இனத்தவருக்கு எதிராக இனவாதத்தை அவிழ்த்துவிட்டிருக்கிறது என்பது அவர் வாதம்.

இத்தகைய இனவாதச் எசய்கைகள் தென்னாபிரிக்க வெள்ளையின இளைஞர்கள் கிரிக்கெட், றகர் போன்ற விளையாட்டுக்களைப் புறந்தள்ளி, ரெனிஸ், கோல்வ் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள் என்கிறார் அவர். தென்னாபிரிக்காவின் திறமை வாய்ந்த இளைஞர்கள் இங்கு ஒதுக்கப்படும்போது அவர்களுக்கு இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெரும் வரவேற்புக் கிடைக்கின்றன என்று ஆத்திரந்தீரப் பொரிந்துதள்ளும் அவர், தரம் குறைந்த ஆட்டங்க ளையோ, வீரர்களையோ பார்க்க விரும்பமாட்டார்கள் என்கிறார்.



சோலக்லி
எங்களுக்கும் காலம் வரும்

கடந்த அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தின்போது ஜக்கஸ் ரூடொல்புக்குப் பதிலாக ஜஸ்ரின் ஒன்ரொங் சேர்க்கப்பட்டது அப்பட்டமான அநியாயம் என்றும் இப்படியே போனால் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அதலபாதாளத்துக்குள் சரிந்துவிடும் என்றும் எச்சரிக்கிறார் கிளைவ் றைஸ்.

இவர் கூறும் காரணங்கள் நியாயமற்றவை என்று முற்றாக ஒதுக்கவும் முடியவில்லை. என்றாலும், இவ்வளவுகாலம் அடிமைப்பட்டிருந்த மக்கள் தாமும் தமக்குரிய இடத்தைப் பெறமுயலும்போது சில சந்தர்ப்பங்களில் இப்படியான குறைபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாததுதான். இருந்தாலும் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் தரம் வீழ்ச்சியுறாத வகையில் இந்த மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்றும் கிளைவ் றைஸ் விரும்புவதாகக் கருதிக்கொள்ளலாம். அதேவேளை அந்தக் கால தென்னாபிரிக்க உணவு விடுதிகளில் "நுழையத் தடை - நாய்களும் கறுப்பர்களும்" என்ற அறிவித்தல் பலகை உணவகங்களில் காணப்பட்டபோது இவர் இளைஞராக இருந்திருப்பார். அப்போது நீங்கள் என்ன உணர்வை அடைந்தீர்கள் என்று நாங்கள் கேட்கவிரும்பவில்லை.

- ஜோசப் கிருஷ்ணா.

# மங்குமோ இந்த நிலவு

அமெரிக்கத் தடகள வீராங்கனை மரியன் ஜோன்ஸ் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பெரிதும் சோபிக்க முடிய வில்லை என்பதென்னவோ உண்மை தான். ஆனால், அவுஸ்ரேலிய சிட்னி நகரில் 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அவர் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை ஐந்து. இதில் மூன்று தங்கப்பதக்கங்களாகும்.

இதன் பின்னர் மரியன் மீது எங்கிருந்தோ சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அதாவது ஊக்க மருந்துப் பாவனை தொடர்பான குற்றச்சாட்டுக்களே அவை. இருந்தபோதும் அவர் அவற்றை வன்மையாக மறுத்திருந்தார். ஆனால் சர்வதேச ஒலிம்பிக் கொமிட்டியின் தலைவர் - மரியன் ஜோன்ஸ் நான்கு வருடங்க ளுக்கு முன் ஊக்கமருந்து பாவித்தாரா என்பதைக் கண்டறிய ஒரு விசாரணையை ஆரம்பித்துள்ளார். சில வேளைகளில் இந்த விசாரணைகளில் மரியன் ஜோன்ஸ் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படு மாயின் அவர் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் வென்ற ஐந்து பதக்கங்களும் அவரிடம் இருந்து பறிக்கப்படும்.



மரியன் ஜோன்ஸ்
முள்ளில் ரோஜா

புதிதாக முளைத்துள்ள சர்ச்சைகளின் படி BAY AREA LABORATORY சார்ந்த றோக் என்பவர் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளுக்கு முன்பதாக மரியனுக்கு ஊக்க மருந்துகள் கொடுத்ததாக ஒரு தொலைக்காட்சிப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார். சர்வதேச ஒலிம்பிக் கொமிட்டி (IOC) இது போன்ற விடயங்களில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்பதாகத் தெரிகிறது. உண்மை வெளிவரும் என்று நான் நம்புகிறேன் என்கிறார் இவர். இது ஒருபுறம் இருக்க ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு நாள் நிகழ்வுகள் நடைபெற்று அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குள் எந்த முடிவையும் மீள்பரிசீலனை செய்ய சட்டத்தில் இடமுண்டு. இதேவேளை சிட்னி ஒலிம்பிக் போட்டிகள் முடிவடைந்து தற்போது நான்காண்டுகள் முடிவடைந்து விட்டன. இந்த நிலையில் மரியன் மீதான விசாரணை கள் செல்லுபடியாகும் என்று எதிர்பார்க்க முடியுமா? என்றும் ஒரு வினா எழுந்துள்ளது. இதேசமயம் ஊக்க மருந்துப் பாவனைக்கு எதிரான நிறுவனத்தின் தலைவர் கருத்துக் கூறுகையில் - இப்பொழுது தான் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன. இன்னமும் சரியான முறையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட வில்லை. இவை எல்லாவற்றையும் முறைமைப்படுத்திய பின் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிப் பார்ப்போம் என்கிறார்.

கொடிகட்டிப் பறந்த தடகளத் தேவதை மரியன், இத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் வகையில் நடந்திருக்கமாட்டார் என்றே அவரது ரசிகர்கள் எல்லோரும் நம்புகிறார்கள். அப்படி இல்லாவிட்டால் எல்லோருக்கும் பெரும் ஏமாற்றமே மிஞ்சும். - நிர்மலன்.

விளையாட்டு அரங்கம்

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் பொழுதுபோக்கு நிலையம் திறப்பு

சோ.ஆ நிறுவனத்தினரால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட நோயாளர் பொழுதுபோக்கு நிலையத்தின் திறப்பு விழா இன்று மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி மருத்துவ சங்கத் தலைவர் கலாநிதி பிறைறற்றன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி சோ.ஆ நிறுவன திட்ட இணைப்பாளர் கால்ட் வேரிஒம் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய த.போதனாந்தராஜா, தமிழீழ வணிக ஒன்றியத் தலைவர் சொ.ஜெகராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் "சிறுநீரக செயலிழப்புக்குள்ளான நோயாளிகளுக்கான அறிவுரைகள்" என்னும் நூல் வெளியீட்டு விழாவும், ஒளி விழாவும், இந்த வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகக் கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினர் தெரிவித்தனர். (க)

## மனநோயால் பாதிக்கப்பட்டவர் தீக்காயத்துக்குள்ளாகினார்

மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் தன்னைத் தானே மண்ணெண்ணை ஊற்றி எரிக்க முற்பட்டு தீக்காயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின்போது எஸ். லோகிதநாஸ் (வயது 40) என்பவரே தீக்காயங்களுக்கு உள்ளானவராவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மனநோயால் பாதிக்கப்பட்ட இந்த நபர் தன்னைத் தானே மண்ணெண்ணை ஊற்றி எரிக்க முற்பட்ட போது, அயலவர்களால் காப்பாற்றப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

## எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்ட தாதியர், மருந்தாளருக்கான எயிட்ஸ் சம்மந்தமான கருத்தரங்கு, சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைகள் நடத்தப்பட்டது.

இதில் தாதியர்கள், மருந்தாளர்கள் எனப் பெருமளவானோர் பங்குபற்றிப் பயன் பெற்றுள்ளனர் என, கிளிநொச்சி சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவித்தார்.

## வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் யாழ்ப்பாணத்திற்கு இட மாற்றம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் எதிர்வரும் ஜனவரி முதல் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இடமாற்றம் பெறவுள்ளார்.

அவரின் இடத்துக்குப் பதிலாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம் வவுனியா மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக வவுனியா அரசாங்க அதிபராகச் செயற்பட்டு வரும் இவர் வவுனியா மாவட்ட மக்களுக்கும், வன்னி மாவட்ட மக்களுக்கும் பெரும் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபர் யார் என்ற விபரம் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

## ஓட்டோ மோதியதில் ஒருவர் காயம்

கிளிநொச்சி - டிப்போச் சந்தியில் பாதசாரி ஒருவரை ஓட்டோ மோதியதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் வீதியால் பயணம் செய்து கொண்டிருந்தவேளை, பின்னால் வந்த ஓட்டோ மோதியதில் இவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த சி.பூலோகராசா (வயது - 52) என்பவரே காயமடைந்தவராவர். இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வைத்திய அதிகாரி நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாக கலாநிதி சதானந்தன் கடந்த புதன்கிழமை தொடக்கம் பொறுப்பேற்றுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்டப் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

## ஜீவனோபாய கடன் அறவிடப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் பிரதேசங்களில் முதலீடு செய்யப்பட்ட ஜீவனோபாய கடன் அறவிடப்படமுடியாதுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் நியாப் திட்டத்தின் கீழ் கடந்த 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன், இதுவரையில் செலுத்தப்படாமையால், சுழற்சி முறைக்கடன் திட்டத்தை உரிய முறையில் செயற்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நிதி ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்ட மூன்றாம் பிட்டி கிராமத்தில் நூலகம், பொது நோக்கு மண்டபம், சிறுவர் பூங்கா போன்றன அமைக்கப்படவுள்ளன.

இவற்றை அமைப்பதற்கு யு.என்.டி.பி நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதன் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

## முரசுமோட்டை பழையகமம் வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முரசுமோட்டை - பழையகமம் வீதி புனரமைப்புக்கென நிதி ஒக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டை கிராமத்தின் பழையகமம் வீதி, புனரமைப்புக்கென ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் கண்டாவளைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வீதி அண்மையில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டபோதும், சீரான முறையில் புனரமைப்புச் செய்யப்படாமையால், இந்த வீதியூடாக மக்கள் பயணிக்க முடியாது பெரும்சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பம்... த.தவரூபன்

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

**சிங்கப்பூரில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் 'வெப்.தமிழன்' இணையத்தள ஆசிரியர் தவரூபன் சமர்ப்பித்த கட்டுரை...**

*(தொடர்ச்சி....)*

இவற்றின் தானியங்கி இயந்திரங்கில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கிறன. கிராமப்புறங்களில் கூட தானியங்கி வங்கி நடவடிக்கைகள் பிரபல்யம் பெற்றுவருகின்றன. இருந்தபோதிலும் இணையவழி வங்கிநடவடிக்கைகளில் பங்குகொள்ளும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கிறது. பாதுகாப்புக்குறித்த அச்சமும், தெளிவான இணைய அறிவின்மையும், மொழிப்பிரச்சினையும் இதற்கு தடைக்கல்லாயிருக்கின்றன. வங்கிகளின் இணையவழி நடவடிக்கைகளில் மொழிப்பிரச்சினையைத் தீர்க்க எல்லா மொழிகளிலும் எழுத்துருப்பாவனையை புகுத்துவது மிகப்பெரிய சவாலாகவே உள்ளது. இது பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்டது என்பதே காரணம்.

இலங்கை அரசாங்கம் தனது அரச இயந்திரங்கள் பலவற்றையும் ஒரு வலைப் பின்னலில் கொண்டுவரும் செயற்பாட்டில் குறிப்பிடத்தக்களவுக்கு முன்னேறியிருக்கிறது. இலங்கை அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.priu.gov.lk) மும்மொழிகளிலும் உலாவருகின்றபோதிலும் ஆங்கிலம் தவிர்ந்த மற்ற மொழிகளின் பயன்பாட்டிலும், பிரயோகத்திலும் வறுமை நிலையே காணப்படுகிறது. எழுத்துருவைப் பொறுத்தவரையில் இன்னமும் பழைய சித்தாந்தம் கடைப்பிடிக்கப்படுவது வருந்தத்தக்கது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசாங்க திணைக்களங்களில் பெரும்பாலானவை தம்மை இணையத்தில் இணைத்துக் கொண்டுவிட்டன. அநேகமானவை விபரங்களை வழங்கும் தளங்களாக மட்டுமே இருக்கின்றன. அவையனைத்தும் தமது சேவைகளை இணையவழி வழங்க வழிசெய்யப்படவேண்டும். இது ஒன்றும் முடியாத காரியமில்லை. முதலில் அலுவலகங்கள் கணினிமயப்படுத்தப்படுவதே அதற்கு வழிகோலும், மேலும் பல இணையத்தளங்கள் சரியான முறையில் இயங்கவும் மறுக்கின்றன. இது திட்டங்கள் பராமரிக்கப்படுவதில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுகின்றன.

குறிப்பாக வலைப்பின்னல்படுத்தப்பட்ட இந்த அரச நிர்வாகக்கட்மைப்புக்கள் ஊடாக ஈழத்தில் மக்கள் பெறக்கூடிய சேவைகளை நாம் இத்தருணத்தில் மறைத்துவிட முடியாது. இவை இயங்குவதில் சில தொழில் நுட்பப் பிரச்சினைகள் இருந்தாலும், எதிர்காலத்தில் அவை சரிசெய்யப்படுமாயின், மின்னரசின் அங்கங்கள் வலுப்பெறும் என துணிந்து கூறலாம்.

அரச வர்த்தமானி அறிவித்தல்கள், அரச சுற்று நிருபங்கள், தொலைபேசி விபரக் கொத்து, சட்ட ஆலோசனைகள், விமான சேவை, தொழிலாளர் நலன்காப்பு, பொலிஸ் சேவை, தேர்தல்சேவை, பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை முடிவுகள், இலங்கை அரசின் நாளாந்த நடவடிக்கைகள், பாதுகாப்பு, நிலவரங்கள், வானொலிசேவை, வங்கி நடவடிக்கைகள் பல்கலைக்கழகங்கள் சில பாடசாலைகள் என பலதரப்பட்டவை தமிழ், சிங்கள மொழிகளில் கூட இணையத்தில் இணைந்துவிட்டன. உள்ளூர் அரச கட்டமைப்புக்கள் பலவும் தமக்கென இணையத் தளங்களை அமைத்துக் கொண்டுவிட்டன. மருத்துவசேவை கூட தற்போது இணையத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஈழத்தில் மின்னரசுக்கான ஏதுநிலைகளை மிகத்தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன.

இந்த இடத்தில் ஒன்றைக்குறிப்பிடலாம். அதாவது- ஈழப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட நாடு தற்போது போராட்டத்தில் ஈடுபட்ட இருதரப்பும் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றன. போராட்ட காலத்தில் இருதரப்பும் எவ்வாறு பிரசாரப்போருக்கு தகவல் தொழில்நுட்பத்தை உபயோகித்தார்களோ, அதே அளவில் சமாதான முயற்சிகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள். இதற்கு இருதரப்பினரதும் சமாதான பணியகங்களின் இணையத்தளங்களே சான்று பகரும் இது வரவேற்கத்தக்கது.

அரச அலுவலங்கள் யாவும் எவ்வளவு விரைவில் மின்மயப்படுத்தப்படுகின்றனவோ, அந்தளவு விரைவில் மின்னரசுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்பது வெளிப்படை. என்றாலும், இதற்கு இணைய வலைப்பின்னலில் அவை இணைக்கப்படுவதும், மின்னரசின் முழுமைத்தன்மையை அடைய வழிவகுக்கும்.

மேலும் இணையம் மூலமாக நேரடியாகச் சேவைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்வதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். இது ஈழத்தைப் பொறுத்தவரையில் இயலாததொன்று என்றோ, கடினமென்றோ கூறமுடியாது. மூலதனமும் பயிற்சியும் தான் தற்போது அவசியமாக தேவைப்படுகிறது. அடிமட்டத்தில் இருந்தே கணினிப்பயிற்சியை வழங்கும் அதேவேளை தகவல் தொழில் நுட்ப ரீதியில் அலுவலகங்களை மீளமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை ஒவ்வொரு திணைக்களமும் தமது நிதிப்பங்கீடுகளில் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இதற்கிடையில் தனியார் நிறுவனங்களும, அமைப்புக்கீளும் துரிதவேகத்தில் தம்மை கணினிமயப்படுத்துவதிலும் சேவைகளை துரிதகதியில் நேரடியாக தகவல் தொழில் நுட்பத்தின் உதவியுடன் வழங்குவதில் பெரிதும் முனைப்புக்காட்டுகின்றன. நகர்ப்புறங்களின் இந்தச்செயற்பாடுகளின் வேகம் அதிகமாகவே இருக்கிறது. இணையம் என்று விவாதிக்கும்போது ஒன்றைக்குறிப்பிடவேண்டும். இவ்வளவு காலமும் 'லீஸ்ட்' இணைப்புக்கள் மூலமே இணையசேவைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. தற்போது இலங்கை ரெலிகொம் நிறுவனத்தால் ADSL எனப்படும் அதிகவீச்சும், வேகமும் கொண்ட இணைப்புக்கள் மூலம் மிகக்குறைந்த செலவில் வழங்கப்படுகிறது. எனினும் அது பல பிரதேசங்களுக்கு விஸ்தரிக்கப்படாதிருப்பது பெருங்குறையாக உள்ளது.

தற்போது இணையசேவை நிலையங்கள் அதிகரித்துள்ள நிலையில் இணைய சேவை வழங்குநர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. அதற்கு தொலைத்தொடர்பு கொள்கைகளை இலங்கை அரசாங்கம் மாற்றியிருப்பதே காரணமாகும். எனினும் ஒரு சில நிறுவனங்களின் ஏகாதிபத்தியம் மேவப்படவேண்டியது. அவசியமாகும். இந்தத் துறையில் முதலீடு செய்பவர்களை ஊக்குவித்தலே அதற்கு வழிவகுக்கும். இதற்கிடையில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் கீழ் நாட்டில் உள்ள தொலைபேசி இலக்கங்கள் யாவும் 10 இலக்கங்கள் கொண்டதாக மாற்றப்பட்டிருக்கின்றன.

நாட்டில் உள்ள அநேக செய்திப்பத்திரிகைகள் தமது பதிப்புக்களை இணையத்திலும் வெளியிடுகின்றன. தமிழ் சிங்கள மொழிகளில் கூட பத்திரிகைள் உலாவருகின்றன. இங்குள்ள முக்கிய பிரச்சினை எழுத்துருதான். அதில் எவரும் ஒருமித்த கருத்துக்கு வரவில்லை. பழைய எழுத்துருக்களை கைவிடுவதில் இந்தப் பத்திரிகைகளின் இணையப்பதிப்புக்கள் என்றால் என்ன ஈழத்தில் இருந்து வெளியாகும். இணையத்தளங்கள் மற்றும் இணையச்சஞ்சிகைகளாயிருந்தால் என்ன பின்னிற்கின்றன.

நமது ஈழநாடு என்ற யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் செய்திப்பத்திரிகையே முதன்முதலாக யுனிக்கொட் எழுத்துருவில் தனது இணையப்பதிப்பை வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து வீரகேசரி பத்திரிகையும், யுனிக்கொட் எழுத்துருவுக்கு மாறிவிட்டது. எனினும் இன்றும் மற்றைய பத்திரிகைகள் யுனிக்கொட்டுக்கு மாறுவதற்கு சற்று பின்னடிக்கின்றன. இந்த நிலைமாறவேண்டும்.

ஈழத்தில் இருந்து வெளியிடப்படும் ஒரு சில இணையத்தளங்கள் குறிப்பாக வெப். தமிழன்,கொம், சூரியன் கொம், யுனிக்கொட் எழுத்துருவுக்கு மாறிவிட்டன. ஆனால் புதிதாக முளைக்கும் ஈழ இணையத்தளங்களோ, ஏற்கனவே நடத்தப்படும் இணையத்தளங்களோ யுனிக்கொட் எழுத்துரு பற்றி கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. யுனிக்கொட் எழுத்துரு பற்றிய தெளிவான புரிதல் இல்லாமையே இதற்குப் பிரதான காரணமாகும். அது களையப்பட வேண்டியதொன்றாகும். புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்குதலே ஈழத்தில் தமிழ் தகவல் தொழில்நுட்பம் கலந்த மின்னரசுக்கான முன்னெடுப்புக்களை விரைவுபடுத்தும்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் ஆள்களப் பெயர்களை (Domains) கட்டுப்படுத்த அமைப்பு ஒன்று இருக்கிறது. (www.nic.lk) இது மிகச்சிறப்பாக நாட்டுக்குரிய ஆள்களப் பெயர்களை நிர்வகித்து வருகிறது.

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பததின் முக்கியதொரு திருப்பமாக, இன்னும் ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிடவேண்டும். இலங்கையின் முன்னணி தனியார் கம்பியில்லா தொலைத் தொடர்பாடல் சேவை வழங்கும் தனியார் நிறுவனமான டயலொக் - இது மலேசியா ரெலிக்கொம் நிறுவனத்துக்கு சொந்தமானது) இலங்கையின் முதலாவது நடமாடும் தொலைத் தொடர்புகள் ஆராய்ச்சி ஆய்வு கூடத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கையை மொரட்டுவப் பல்கலைக்கழகத்துடனும் அதனது கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்பான யுனி - கொன்ஷல்டன்சி சேவிஸ் (UNIC) உடனும் செய்துகொண்டுள்ளது.

இதனால் என்ன பயன் ஏற்படும்? பல்கலைக்கழகத்துக்கும், தொழிற்துறைக்கும் இடையிலான கூட்டிணைப்பு - நாட்டின் தொலைத்தொடர்பாடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பில் புதிய சகாப்தமொன்றுக்கான அடையாளமாகக் கருதலாம். அதனூடு இணைய தொலைத்தொடர்புத் துறையில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இங்கும் வலுப்பெறும் என நம்பலாம். கைத்தொலைபேசித் தொழிநுட்பத்திலும், அதன் பயன்பாட்டிலும் எமது நாட்டுக்கே உரித்தான தகவல்தொழில் நுட்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், இன்னும் குறிப்பாக தமிழ் உள்ளிட்ட மொழிகளின் பயன்பாட்டை உட்புகுத்துவதற்கான வாய்ப்பும் இதனால் ஏற்பட்டிருக்கிறது.

இதனை பயன்படுத்திக் கொள்ளவேண்டியது எமது மாணவர்களின் திறமையாகும்.

*(தொடரும்....)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பேதமை எனபதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு*
*ஊதியம் போக விடல்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## தேசத்தை நாசம் செய்யப்போகும் தீர்க்க தரிசனமற்ற அரசியல் முழவுகள்

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு, போர்நிறுத்தம் அமுலுக்குவந்து மூன்றாண்டுகள் ஆகும் வேளையிலும், போர்நிறுத்தம் புரிந்துணர்வு உடன்பாடு ஆகிய இரண்டினதும் நன்மைகள் எதனையும் போரினாலும், அதனோடு தொடர்புடைய பொருளாதாரத்தடை, இராணுவக் கெடுபிடிகள் போன்ற பல்வேறு அழுத்தங்களாலும் பாதிக்கப்பட்டு, நிரந்தர துயரங்களைச் சுமக்கும் பெருமளவிலான அப்பாவித்தமிழ் மக்கள் அனுபவிக்கும் வாய்ப்பினை, சிங்கள ஆட்சியாளர் வழங்காததுடன் தொடர்ந்தும் அவர்களைச் சுதந்திரமாகத் தமது சொந்தப் பாரம்பரிய வதிவிடங்களில் தம் இருப்பை நிலைநிறுத்தி வாழ்வதற்கான தார்மீக உரிமையை நிராகரித்தும் வருகிறார்கள் என்பதே மிகவும் ஏமாற்றம் தரும் விடயமாகும்.

வளமான தமது வாழ்விடங்களை இராணுவ முகாம்களாக்கி, அதற்கு உயர்பாதுகாப்பு வலயமெனப் பெயருமிட்டு ஆக்கிரமித்து நிற்கும் படைத்தரப்பினர் தங்களது சொந்த நிலத்திற்கு உரிமை கொண்டாடும் போக்கில் நடந்துகொள்வது சமாதான நடைமுறைகளின் எந்தவிதிமுறைக்கு உட்பட்டது என்ற பாதிக்கப்பட்ட மக்களின் நியாயபூர்வமான கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்திற்கே உண்டு.

ஆனால் அவர்கள் இதுகுறித்து வாய்திறந்து நியாயம் கூறுபவர்களாக இல்லை. இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக சமாதானம் சமாதானம் என்று சொல்லிக்கொண்டு [illegible]திப்புற்ற தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வியற் பிரச்சனைகளுக்கே தீர்வுகாணமுடியாது, அலைந்து திரியும் சமாதான ஏற்பாட்டாளர்கள் தமிழினத்தை கொத்தடிமைகளாகவே வைத்திருக்கவேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு பல தசாப்தகாலமாக செயற்பட்டுவரும் பேரினவாதத் திமிர்பிடித்த சிங்கள ஆளும் வர்க்கத்தினரிடமிருந்து, அவர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான நியாயத்தன்மைமிக்க தீர்வொன்றினை பேச்சுவார்த்தைகள் மூலம் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கை அரசின் அண்மைக்கால செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களிடமிருந்து முற்றாக அகன்றுவிட்டது என்றே கூறவேண்டும்.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்தபடி - எரியும் பிரச்சினைகளாக உருவெடுக்கத் தொடங்கியுள்ளதை வைத்தே அரசியல் ஆதாயம் தேடமுனையும் சிங்கள அரசியல் தலைமைகள் இறுதித் தீர்வு குறித்துப் பேசுவோம் என்று கேட்பதானது கோமாளித்தனமான ஒன்றேயாகும்.

நிரந்தரத் தீர்வென்பது சிங்கள ஆட்சியாளர் தம்மீதான நம்பிக்கையை, தமது அரசியல் நேர்மையை முதலில் தமிழ் மக்களுக்கு உறுதியாக நிரூபிக்காதவரைக்கும் பேச்சுவார்த்தைகள் இட்டக்கூடிய ஒன்றாக இருக்கவே போவதில்லை என்ற இன்றைய ஆட்சிச்சூழல் யதார்த்தத்தை சமாதான வலியுறுத்தல்காரர்கள் முதலில் தெளிவாக உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான, உரிமைபூர்வமான பிரச்சினைகளுக்கு, இராணுவ மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கும் படைத்தரப்பு அபிலாஷைகளுக்கு முன்னுரிமை கொடுத்து - அதனடிப்படையில் தீர்வுகாண திடசங்கற்பம் பூண்டு நிற்கும் சிங்கள ஆட்சி அதிகார பீடத்தவரால் நிச்சயமாக நிரந்தர தீர்வொன்றிற்காக நேர்மையாகவும், உறுதியாகவும் ஓரங்குல நகர்வைத்தானும் மேற்கொள்ளமுடியாது என்பதை கடந்தகால அனுபவங்கள் மிகத் தெளிவாக உணர்த்திநிற்கவே செய்துள்ளது.

யாழ் .குடாநாட்டின் உயர்பாதுகாப்பு வலய இராணுவ ஆக்கிரமிப்பு, மக்கள் குடியிருப்பு பகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவதை இராணுவம் விரும்பவில்லையென வெளிப்படையாக, தம்மை அது தொடர்பாகச் சந்தித்துப் பேசிய தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் கூறிய ஜனாதிபதியின் கருத்து, இராணுவ நலன்களை மீறி தமிழ்மக்கள் நலன்கள் குறித்தோ, அவர்களின் உரிமைகள் குறித்தோ அவர் பேசத் தயாராக இல்லை என்பதை உறுதி செய்வதாக உள்ளதல்லவா?

இந்த நிலையில் இறுதித் தீர்வு குறித்துப் பேச அவர் அழைப்பது குறித்து தமிழர் தரப்பு எத்தகைய முடிவை எடுக்கமுடியும்?

முதலில் இராணுவ நெருக்கடியைத் தளர்த்தி, தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளை அங்கீகரித்து சமாதானத்துக்கு எதிரான சக்திகளைக் கட்டுப்படுத்தி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான கீழ்த்தரமான விஷமப் பிரசாரங்களை நிறுத்தி, சமாதானம் மீதான தனது பற்றுறுதியை ஜனாதிபதி நிரூபிக்க வேண்டிய கடைசிக்கட்டத்தில் அவர் மனித நேயத்துடன் நடந்து கொள்ளவேண்டியதே முக்கியமானதாகும்.

அதனைவிடுத்து போர்வெறி கனலும் மனதுடன் சமாதானத்தை வெறும் உதட்டினால் உச்சரிப்பதில் எந்த இலாபமுமில்லை.

அரசினதும் ஜனாதிபதியினதும் தற்போதைய அரசியல் மற்றும் இராணுவ மூலோபாயங்கள் அவருக்கு சமகால அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், இலாபங்களுக்கும் அனுகூலமாக இருக்கலாம். ஆனால் அதன் விளைவுகள் முழு இலங்கையையும் பெரும் நாசகார நெருக்கடிக்குள் தள்ளும் என்பதை அரசியல் நோக்கர்கள் எச்சரிக்கத் தொடங்கியுள்ளதையும் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வது மிகமிக அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




## ‘ஊர்சுற்றி’யார் பார்வையில்...

# மீண்டும் போர் வருமா?

நோர்வேயின் சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் வந்து போய்விட்டார். சமாதானப் பேச்சுமற்ற ஒன்றையும் காணோம். மீண்டும் போர் வருமோ?

சாதாரணமாக நூறுபேர் கூடும் இடங்களில் இப்போது இதுதான் பேச்சாக இருக்கிறது.

“பொடியன்கள் சண்டைக்கு ஆட்சேர்க்கிறான்களாம்? யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரு பேப்பரிலையும் இது பற்றிப் போட்டிருந்ததாம்” உண்மை தானோ என்று ஒரு மூதாட்டி கோயிலடியில் நின்று கேட்டார்.

பொடியன்கள் ஆட்சேர்க்கிறதைப் பற்றிச் சொல்லுறீங்கள் அரசாங்கம் நாடு நாடாய்ப் போய் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யிறதுக்குப் பேச்சு நடத்திக் கொண்டு திரியிறதைக் கேள்விப்படேல்லையோ? என்று அருகே நின்றவர் மூதாட்டியைப் பார்த்துக் கேட்டார்.

இதையும் நான் பேப்பர்களில் படிச்சிருக்கிறன். இப்ப கொழும்புக்கு அந்தப் பக்கத்தில கடலில் இந்தியக் கடற்படையும் இலங்கைக் கடற்படையும் பயிற்சி எடுத்ததையும் நான் பேப்பரில் பார்த்தனான்.

விடுதலைப்புலிகளின் கடற்படை பலம் பெற்று வருவது இந்தியாவுக்கு ஆபத்து என்று இந்திய ஆய்வாளர் ஒருவர் அபாயச் சங்கு ஊதியிருக்கிறார். புலிகளின் கடற்படைப் பலத்தை முறியடிக்காவிட்டால் ஆபத்து என்றும் அவர் சொல்லியிருக்கிறாராம்.

அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த சமயத்தில், கடல் உரிமை பற்றி அதிக கவனம் செலுத்தாமல் போனது கொஞ்சம் கவலை தான் என்று சிலர் சொல்லுகினம்.

ஆனாலும், எங்கட நிலப்பகுதியோட இருக்கிற கடல் எங்களுக்குத் தானே சொந்தம். இதில் வேற ஆட்கள் வந்து எப்படி உரிமை கொண்டாடுகிறது? ஆச்சி கேட்டா.

யாரும் எதையும் சொல்லிப் போட்டு போகட்டும் நாங்கள் எங்கட விடுதலைக்கு எல்லோரும் ஒற்றுமையாகக் குரல் கொடுத்துப் போராட்டத்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால், மற்றவர்கள் வந்து என்ன செய்ய முடியும் என்றார் அருகே நின்றவர்.

“நாங்கள் போருக்கும் தயார் சமாதானத்துக்கும் தயார்” என்று கிட்டடியில சந்திரிகாவின் தம்பி அநுரா பண்டாரநாயக்க, ஜே.ஆர். மாதிரி முழங்கியிருந்தார். இப்ப வேறென்னவோ சொல்கிறாராம். என்று மீண்டும் ஆச்சி கேட்டா.

அநுராவுக்கென்ன பொண்டாட்டியா? பிள்ளையா? கவலைப்படுவதற்கு அவர் எதையும் பேசுவார்.

போருக்குப் போகும் நோக்கம் இப்போதைக்கு அரசுக்கு இல்லை என்று அநுரா சொல்லியிருக்கிறாராம்.

இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபைவரைபை அடிப்படையாக வைத்துப் பேச்சைத் தொடங்கினால், சந்திரிகா அம்மையாரும் தனது நிரந்தர சமாதானத் திட்டத்தையும் பேச்சில் கொண்டு வந்து பேசலாம் தானே என்றார் மற்றவர்.

சமாதானத்தில் முழு நாட்டமிருந்தால், எப்படியும் பேச்சைத் தொடங்கலாம். ஜனாதிபதி பதவியில் எப்படித் தொடர்ந்திருப்பது, அரசமைப்பைத் திருத்தி நாடாளுமன்றத்துக்குச் சகல அதிகாரமும் வழங்கி, சகல அதிகாரமுமுடைய பிரதம மந்திரி பதவியை எப்படி எடுத்துக் கொள்வது என்பதில்தான் அம்மையாருக்கு ஒரே நாட்டம். இதற்காக எப்படிச் சமாதானப் பேச்சைக் காலம் கடத்தலாமென்பது தான் இப்போதுள்ள பிரச்சினை.

இதுக்குள்ள மீண்டும் சண்டை வந்துவிட்டால் என்ன செய்வது? இது ஆச்சியின் கேள்வி.

நோர்வே சமாதான முயற்சிகளைக் கைவிட்டு, நாட்டைவிட்டு வெளியேறினால் போர் மூளலாம். ஆனால் நோர்வே இதிலிருந்து நழுவி வெளியேறுவதற்கு அம்மாவும், அரசும் விடாது என்றார் மற்றவர்.

அதுதான் மூட்டை முடிச்சோடு போய்ச் சேருங்கோ என்று ஜே.வி.பி.க்காரர் நோர்வேக்குச் சொன்னதும், அம்மா துடிச்சுப் பதைச்சு நாங்கள் சொல்லவில்லை. அதுக்கும் எமக்கும் தொடர்பில்லை என்று மறுப்புத் தெரிவித்துச் சமாளித்துப் போட்டார்.

போர் மீண்டும் ஏற்படுவதை யாரும் விரும்பவில்லை என்றுதான் தெரிகிறது. ஆனாலும் “சும்மா சுறண்டிக் கொண்டு தங்களைப் பலப்படுத்துவதில் அரசும், அரச படைகளும் உசாராகச் செயல்பட்டுக் கொண்டுதானிருக்கின்றன.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றும், பிள்ளைகளைப் படைக்குச் சேர்க்கிறார்களென்றும், கொலைகள் புரிகிறார்களென்றும், சிங்கள மேலாண்மைவாதிகள் சளைக்காமல் உலகம் முழுவதிலும் பிரசாரம் செய்துவருகின்றனர்.

இதற்கு நம்மவர் சிலர் அறிக்கை விட்டு, சங்கு ஊதிக் கொண்டிருக்கின்றனர் என்றார் ஆச்சி.

ஷாருக்கான் நிகழ்ச்சியில் வெடித்த குண்டுக்கும் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாம் என்று ஒரு பிக்கு மொட்டந்தலைக்கும், முழந்தாளுக்கும் முடிச்சுப் போட்டு அறிக்கை விட்டாரே பார்த்தீர்களா என்று ஆச்சி தொடர்ந்து கேட்டார்.

அதை இப்படிச் சொல்லக்கூடாது. மொட்டந் தலைக்கு என்பதில் தலையை எடுத்துவிட்டுச் சொல்லிப் பாருங்கள் எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்றார் அடுத்தவர்.

### - றீடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் -

# வடக்கின் ஐந்து மாவட்டங்களில் கல்வி சார் அபிவிருத்திப் பணிகள்

(சுதுமலை)

கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் 2005 ஆம் ஆண்டில் வடக்கின் ஐந்து மாவட்டங்களில் கல்விசார் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

நோர்வே அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் இந்த நிறுவனத்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் உதவிகள் தேவைப்படும் பிரதேசங்களைத் தெரிவு செய்து இந்த அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்த தகைமையுள்ள மாணவர்களுக்கு விசேட கல்வியை வழங்கல், இடைவிலகிய மாணவர்களுக்கான நடமாடும் கல்விச் சேவையை வழங்கல், பெற்றோர் வீட்டுக் கல்வியை நடைமுறைப்படுத்தல், ஒவ்வொரு இளைஞர் - யுவதியையும் வலுப்படுத்துவதுடன், அவர்களை சமூக மாற்றத்துக்குத் தயார்ப்படுத்தல் ஆகிய செயற்திட்டங் களையே அடுத்த ஆண்டில் இருந்து வழங்கவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலக இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

# வடமராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் மருத்துவ சேவை

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் வைத்தியசாலை வசதிகள் இல்லாத பின்தங்கிய கிராமங்களில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது.

இந்தப் பிரதேசத்திலுள்ள கற்கோவளம், புனிதநகர், அல்வாய் வடக்கு, தொண்டமானாறு ஆகிய கிராமங்களில் நடமாடும் வைத்திய சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கிராமங்கள் வடமராட்சியிலுள்ள மருத்துவமனைகளிலிருந்து நீண்ட தூரங்களில் இருக்கும் கிராமங்களாகும். அத்துடன் கற்கோவளம், புனிதநகர் பகுதி மக்கள் மீள்குடியேற்றக் கிராமங்களாகும். இங்கு தற்போது பெய்துவரும் தொடர் மழையால் தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் இலங்கை செஞ்சிலுவைச் சங்க நடமாடும் மருத்துவப்பிரிவு உடனடி வைத்திய சேவைகளைச் செய்ய முன்வந்துள்ளது. (14)

# டிசம்பர் 2004

| திங் | செவ் | புத | வியா | வெள் | சனி | ஞாயி |
|---|---|---|---|---|---|---|
| | | 25 | 25 | 25 | 25 | 25 |
| 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 25 | 25 | 25 | 25 | 25 | | |


## வெஸ்டன் யூனியனுடன்
### பண்டிகை காலம் ஆரம்பமாகிறது

- வெளிநாடுகளில் உள்ள உங்கள் அன்புக்குரிய நண்பர்களும் குடும்பத்தவர்களும் அனுப்பும் பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பண்டிகை கால வாழ்த்துக்களை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தெரிவியுங்கள்.
- உங்கள் பணத்தை அநாவசியமாக ஆபத்துக்கு உள்ளாக்காதீர்கள்.
- 113 செலான் வங்கி கிளைகளில் ஏதாவதொன்றின் மூலமாக வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றத்தை பயன்படுத்துங்கள்.
- செலிங்கோ செலான் டவர்ஸில் அமைந்துள்ள 24 மணிநேர நிலையத்தில் எந்நேரமும் பணம்பெறும் வாய்ப்பு உண்டு.

எனவே இந்த பண்டிகை காலத்தில் வெளிநாட்டு பணமாற்றுகைக்கு நீங்கள் செலான் வங்கி மூலம் வெஸ்டன் யூனியனை பயன்படுத்தி நத்தார் வருவதற்கு முன்னரே பண்டிகையை கொண்டாட ஆரம்பியுங்கள்.

HOLMES POLLARD & STOTT

WESTERN UNION
பணப் பரிமாற்றல்

ஹொட்லைன்: 2452666

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமை அலுவலகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், இல. 90, காலி வீதி, கொழும்பு 3
தொ.பே: 2452666, 4701000 .·.பக்ஸ்: 2456456


# முல்லைத்தீவு மாவட்ட குளங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குளங்களின் நீர் மட்டங்கள் உயர்வடைந்துள்ளன.

வவுனிக்குளம் 24 அடியாகவும், அம்பலப்பெருமாள்குளம் 9 அடியாகவும், கோட்டைகட்டிய குளம் 8 அடியாகவும், மருதங்குளம் 8அடி 6 அங்குலமாகவும், தென்னியங்குளம், 10 அடியாகவும், தேறாங்கண்டல் குளம் 9 அடியாகவும் கல்விளான் குளம் 10அடியாவும், மல்லாவிக்குளம் 12 அடி 6 அங்குலமாகவும், ஐயன்கன்குளம் 12அடியாகவும், பழைய முறிகண்டி குளம் 9 அடியாகவும், விசுவமடுக்குளம் 18அடி 3 அங்குலமாகவும், உடையார்கட்டு குளம் 21 அடியாகவும், முத்தையன்கட்டுக்குளம் 22 அடியாகவும், மடவாளன்சிங்கம் குளம் 14 அடி 6 அங்குலமாகவும், தண்ணிமுறிப்புக்குளம் 19 அடியாகவும், கனுக்கேணிக்குளம் 12 அடி 6 அங்குலமாக அதிகரித்துள்ளது என பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

# பாண்டியன் குளம் - பாலநகர் வீதி மிக மோசமான நிலையில்

முல்லைத்தீவு - பாண்டியன்குளம், பாலிநகர் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ள நிலையில் காணப்படுவதால், இந்த வீதியால் மக்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

பாண்டியன்குளத்திலிருந்து சிவபுரம், பாலிநகர் ஊடாக மாங்குளம் செல்லும் பிரதான வீதி மற்றும் பாண்டியன்குளம் 3 ஆம் வாய்க்கால் பகுதியிலிருந்து பாலிநகர் வரையான வீதி போன்றன மிக மோசமாகச் சேதமடைந்து பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுவதால், மக்கள் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

# எம்.ஜி.ஆரின் நினைவு தினம்

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 17 ஆம் ஆண்டு நினைவுதினம் கொண்டாடப்படவுள்ளது.

எதிர்வரும் 24, 25, 26 ஆம் திகதிகளில் தமிழர்தாயகப் பகுதி எங்கும் தமிழக முன்னாள் முதல்வரும், நடிகர் திலகமும் ஆகிய எம்.ஜி.ஆரின் 17 ஆம் ஆண்டு நினைவு தினம் கொண்டாடப்படவுள்ளது.

இது தொடர்பான செய்திக் குறிப்பொன்றை மல்லாவியிலுள்ள எம்.ஜி.ஆரின் முன்னேற்றக்கழகம் அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது.

# முல்லைத்தீவு - மாங்குளம் பிரதேசத்தில் வெள்ளத்தால் 975 குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்ட மாங்குளம் பிரதேசத்தில் அண்மை நாட்களில் பெய்த தொடர்மழையால், 975 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் முறிகண்டி, வசந்தநகர், இந்துபுரம் ஆகிய கிராமங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியது. இதனால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த 267 குடும்பங்கள் முறிகண்டிப் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளன.

இதைவிட மாங்குளம் பிரதேசத்தில் 975 குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியதாக மாங்குளம் அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்ட புள்ளிவிபரத்திலிருந்து தெரிய வருகிறது.

# பஸ் தரிப்பிடமில்லை

மன்னார் - வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, கள்ளியடி ஆகிய இடங்களில் பஸ்தரிப்பிடம் இன்மையால், பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிரமாங்களில் பஸ் நிலையங்கள் இன்மையால் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மக்கள் மரநிழல்களிலும், வெயிலிலும் நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது.


1வது முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

## ANNAI NAGAA FOOD CITY




நத்தார், புதுவருட, தைப்பொங்கல் தினங்களை முன்னிட்டு அதிரடி தள்ளுபடி விலையில்

- சுத்தமாக பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள்.
- பல வகையான ஐஸ்கிறீம் குளிர்பான வகைகள், பிஸ்கட், சொக்கிலேட் வகைகள்,
- இறக்குமதி செய்யப்பட்ட பழவகைகள், பழரசங்கள், கேக், மற்றும் கேக் உள்ளீடுகள்,
- ஆங்கில மருந்து, அழகுசாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,
- வீட்டுப் பாவனைப் பொருட்கள், பிளாஸ்ரிக் வகை தளபாடங்கள் இன்னும் பலவகைப் பொருட்கள்,
- இலத்திரனியல், மின்னியல் பொருட்கள், கவரிங் ஆபரண வகைகள், குழந்தைகளின் றெடிமேட் ஆடைகள்,
- மகளிருக்கான றெடிமேட் ஆடைகள், குடை மற்றும் மழைக் கவசங்கள்.

ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

அன்னை நாகா பூட் சிற்றி

175, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021- 222 5515, 021- 222 5223

# பிரிட்டனில் தேர்தல் நெருங்குகிறது; பிளேயருக்கு ஆதரவும் அதிகரிப்பு!



(லண்டன்)

பிரிட்டன் தேர்தலில் தற்போதய பிரதமர் ரொனி பிளேயருக்கு அமோக வெற்றி கிடைக்கும் என்று கருத்துக் கணிப்பிற் தெரியவந்துள்ளது.

பிரிட்டனில் அடுத்த ஆண்டு மே மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் தொழிற் கட்சி சார்பில் தற்போதைய பிரதமர் ரொனி பிளேயர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகிறார். வழமைபோல் கொன்சவேட்டிங் கட்சி பிளேயரை எதிர்த்துக் களமிறங்குகிறது. இந்தக் கட்சியின் சார்பில் மைக்கல் ஹோவார்ட் என்பவர் போட்டியிடுகிறார்.

இரு கட்சிகளுக்கும் உள்ள செல்வாக்குக் குறித்து இப்போதே கருத்துக் கணிப்புகள் தொடங்கிவிட்டன. இதுகுறித்து டெய்லி டெலிகிராப் பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் முக்கிய எதிர்க் கட்சி வேட்பாளர் மைக்கலுக்கு 32 சதவீத ஆதரவே கிடைத்துள்ளது. ஆனால் பிரதமர் ரொனி பிளேயர் மீது மக்கள் இன்னும் நம்பிக்கை வைத்துள்ளனர். அவருக்கு 35 சதவீத ஆதரவை மக்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு நடத்தப்பட்ட கருத்துக்கணிப் பிலும் இதேபோன்று பிளேருக்கு ஆதரவு அதிகமாகக் காணப்பட் டது. ஈராக் மீது போர் தொடுக்க ரொனி பிளேயர் பூரண ஆதரவளித்ததுடன் தனது நாட்டுப் படைகளையும் அந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தார். அதற்கு பிரிட்டனில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தேர்தல் விடயத்தில் பிளேயருக்குத்தான் ஆதரவு அதிகமாகக் காணப்படுகிறது.

சோமாலியத் துறைமுகத்திற்கு

# கடந்த 10 வருடங்களின் பின்னர் பொருட்களுடன் கப்பல் சென்றது!



கடந்த பத்து வருடங்களின் பின்னர் முதன் முறையாக பொருட்களை ஏற்றிய கப்பலொன்று சோமாலிய தலைநகரிலுள்ள துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளது.

இந்தக் கப்பல் துபாய் துறைமுகத்திலிருந்து தொன் கணக்கான உணவுப் பொருட்களுடன் சென்றமை குறிப்பிடத்தக்கது. சோமாலியாவின் வர்த்தகர்களில் பெருமளவானோர் துபாயையே தளமாகக் கொண்டுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக சோமாலியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக இந்தத் துறைமுகம் மூடப்பட்டிருந்தது. இந்தத் துறைமுகம் தொடர்ந்து வரும் காலங்களில் முழுமையாகத் திறக்கப்படுமானால், சோமாலியாவின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதுடன் நாட்டையும் மீளக் கட்டுமானம் செய்யலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைமுகம் கடந்த பத்தாண்டுகளாக மூடப்பட்டுள்ளது போன்றே சோமாலியத் தலைநரிலுள்ள பிரதான விமான நிலையமும் மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தடையின் மத்தியிலும்

# யுகான்ஸ் நெவ்ரேஜ் நிறுவனம் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்!

ரஷ்ய அரசாங்கம் அறிவிப்பு



(மொஸ்கோ)

அமெரிக்க நீதிமன்றின் உத்தரவையும் மீறி யுகான்ஸ் நெவ்ரேஜ் என்கின்ற எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தை ஏலத்தில் விற்பனை செய்யப்போவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட எண்ணெய் உற்பத்தி நிறுவனம் கட்டவேண்டிய 14.2 பில்லியன் ஸ்ரேலிங்பவுண் வரித் தொகையைச் செலுத்த முடியாமல் திண்டாடுவதால் இந்த எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தை ஏலத்தில் விற்பனைசெய்ய ரஷ்யா திட்டமிட்டிருந்தது.

ஆனால் இந்த எண்ணெய் உற்பத்தி நிறுவனத்தை விற்பனை செய்யமுடியாதென அமெரிக்க கூஸரன் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஆனாலும் இந்த எண்ணெய் உற்பத்தி நிறுவனம் திட்டமிட்டபடி இன்று ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ரஷ்ய உயர் அதிகாரி ஒருவர் -

நாம் ரஷ்ய சட்டதிட்டங்களை அனுசரித்துச் செயற்படுவோம். ரஷ்ய நீதிமன்றம் - விற்பனை செய்வதற்குத் தடைவிதிக்காத சந்தர்ப்பதில் அமெரிக்க நீதிமன்றால் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது. அதேசமயம் அமெரிக்க நீதிமன்றின் சட்டதிட்டங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் எமக்கு இல்லையெனத் தெரிவித்தார்.

# பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு கொலம்பிய ஜனாதிபதி காலக்கெடு!



கொலம்பிய புரட்சிகர ஆயுதக் கிளர்ச்சிவாதிகள் கடத்திவைத்துள்ள 63 பணயக்கைதிகளையும் விடுதலை செய்யாவிட்டால் தாம் தடுத்துவைத்துள்ள அந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரை அமெரிக்காவிடம் கையளிக்கப்போவதாக கொலம்பிய ஜனாதிபதி அல்வாரோ உரீபி கிளர்ச்சிவாதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொலம்பிய அரசாங்கத்தால் கிளர்ச்சிவாதக்குழுவின் சிரேஷ்ட தளபதியான றிக்காடோ பல்ரோ என அழைக்கப்படும் சைமன் றினி டாட் என்பவர் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருட்கடத்தல் போன்றவற்றின் முக்கிய சூத்திரதாரியெனத் தெரிவித்து அமெரிக்கா இவரைத் தேடி வருகிறது.

இந்த நிலையில், அரசியல்வாதிகள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மூன்று புலனாய்வு அதிகாரிகளென 63 பேரைக் கடத்திவைத்துள்ள கொலம்பியக் கிளர்ச்சிவாதக் குழு - இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டுமெனில் சிறைகளிலுள்ள தமது அமைப்பின் நூற்றுக்கணக்கான உறுப்பினர்களை விடுதலை செய்யவேண்டுமென நிபந்தனை விதித்துள்ளது.

இதற்குப் பதிலடியாக பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற அந்த அமைப்பின சிரேஷ்ட உறுப்பினரைத் தடுத்துவைத்துள்ள அரசாங்கம், கடத்தப்பட்ட 63 பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் விடுதலை செய்யவெண்டுமெனவும், இல்லையெனில் அமெரிக்காவால் தேடப்பட்டுவரும் சைமன் றினி டாட்டை அமெரிக்காவிடம் ஒப்படைப்போம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் அரசாங்கத்தின் இந்த எச்சரிக்கையை அடுத்து தம்மால் கடத்தப்பட்டவர்களை கிளர்ச்சிவாதிகள் விடுவிப்பார்கள் என எதிர்பாக்க முடியாதெனவும் அத்துடன் கொலம்பிய அரசாங்கம் தடுத்துவைத்துள்ள தமது சிரேஷ்ட உறுப்பினரை அமெரிக்காவிடம் கையளிப்பதனையும் அவர்கள் விரும்பமாட்டார்கள் எனவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

# இஸ்ரேலில் புதிய கூட்டணி அரசமைக்க ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஆதரவு!



(டெல்அவிவ்)

இஸ்ரேலில் புதிய கூட்டணி அரசாங்கத்தை அமைப்பதற்குத் தற்போதைய பிரதமர் ஏரியல் ஷரோனின் லிக்குவட் கட்சியும், எதிர்ககட்சியான ஷிமோன் பெரஸ் தலைமையிலான தொழிற்கட்சியும் இணங்கியுள்ளன.

இரு கட்சிகளுக்கும் இடையிலான இறுதித் தீர்மானம் நேற்றிரவு இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டு வெளியிடப்பட இருந்ததாக எதிர்க் கட்சித் தலைவர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்.

இரு கட்சிகளின் இணக்கத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சிகளுக்கு எட்டு அமைச்சுப் பதவிகளுடன், எதிர்க்கட்சித் தலைவர் ஷிமோன் பெரஸிற்கு துணைப் பிரதமர் பதவியும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கத்தில் இன்னும் சில விடயங்கள் இணைக்கப்பட வேண்டியுள்ளதாகவும், அது தொடர்பாகக் கலந்துரையாடி இணக்கம் காணப்பட்ட பின்னர் இந்த உடன்படிக்கை குறித்த விடயங்கள் வெளியிடப்படுமென லிக்குவட் கட்சிப் பேச்சாளரான ஜோறம் டூரி தெரிவித்தார். எனினும் இன்று இறுதி உடன்பாடு எட்டப்படுமெனவும அவர் தெரிவித்தார்.

பிரதமர் ஏரியல் ஷரோன் தலைமையிலான அரசுடன் இணைந்திருநத சினூய் கட்சி தனது ஆதரவை நிறுத்தியதை அடுத்து ஷரோனின் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்தது.

இந்த நிலையில் தேர்தல் ஒன்று வருவதைத் தவிர்க்கும் வகையில் தொழிற்கட்சியின் ஆதரவைக் ஏரியல் ஷரோன் கோரியிருந்தார்.

இதேசமயம் - காஸாவின் ஜெவிஸ் குடியிருப்புப் பகுதியிலிருந்து யூதக் குடியிருப்புக்களை அகற்றி அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கவேண்டுமென தொழிற்கட்சி கோரியது.

ஆனால் பிரதமர் ஷரோனின் லிக்குவட் கட்சியிலுள்ள சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும், அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்வதில் வேறு வழியில்லாத காரணத்தால், தொழிற்கட்சியின் இந்தக் கோரிக்கைக்கு அவர்களும் இணங்கியே செல்லவேண்டியிருப்பதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

# டர்பூரில் தாக்குதல் நடத்துவதற்கு சூடானிய அரசு தயாராகின்றது

ஆபிரிக்க கண்காணிப்புக்குழு தெரிவிப்பு



சூடானின் டர்பூர் மாநிலத்திலுள்ள சூடானிய விடுதலை இராணுவம் என்ற தீவிரவாத அமைப்புக்கெதிராக ஜான் ஜாவீட் தீவிரவாதக் குழுவுடன் இணைந்து பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு சூடானிய அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக டர்பூரில் உள்ள ஆபிரிக்க கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களாக சூடானிய அரசாங்கம் ஜான் ஜாவீட் கிளர்ச்சிவாதிகளுடன் இணைந்து பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள ஆபிரிக்கக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரியான ஜெனரல் பெஸ்ரஸ் ஒகொன்குவோ, "தற்பொழுது டர்பூர் ஒரு நேரம் கணித்து வைக்கப்பட்ட வெடிகுண்டு, அது எந்த நிமிடமும் வெடிக்கலாம்'' எனத் தெரிவித்தார்.

சூடானிய இராணுவமும் ஜான் ஜாவீட் தீவிரவாதிகளும் இணைந்து தாக்குதல்களை ஆரம்பிக்கக்கூடும் என்ற அச்சம் காரணமாக டர்பூர் மாநில மக்கள் தமது உடைமைகளுடன் வெளியேறி வருகின்றனர்.

ஆனால் சூடானிய அரசாங்கம் தாம் ஜான் ஜாவீட் தீவிரவாதிகளுடன் இணைந்து செயற்படவில்லையென மறுத்துள்ளது.

ஆயினும் சூடானிய இராணுவத்தினரும் சூடானிய விடுதலை இராணுவத்தினரும் தமது துருப்புக்களை, டர்பூரின் தென்பகுதியை நோக்கி நகர்த்தி வருவதாக கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகளை சூடானிய விடுதலை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளதாக கண்காணிப்புக் குழுவினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

உலகிலே பாரிய மனிதாபிமான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள சூடானில் இதுவரை டர்பூர் மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் 70,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# ஒஸாமா பின்லேடன் உயிருடன் உள்ளமை அவரது பேச்சு மூலம் உறுதிப்படுத்தப்பட்டது!



அல்கொய்டா அமைப்பின் தலைவர் பின்லேடன் பேச்சு இணையத் தளம் மூலம் ஒலிபரப்பானதானது அவர் உயிருடன் இருப்பதை உறுதிப் படுத்தியுள்ளது.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பின்லேடனின் பேச்சு, முஸ்லிம் தீவிரவாதிகளின் இணையத்தின் மூலம் ஒலிபரப்பப்பட்டது. அதில் அவர் கடந்த 6 ஆம் திகதி சவுதிஅரேபியாவில் உள்ள ஜெட்டா நகரில் அமெரிக்கத் தூதரகதத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

ஜெட்டாவில் தாக்குதல் நடத்தியவர்கள் அல்கெய்டாவின் சவுதி அரேபியா பிரிவைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுக்கு கருணை காட்டும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறோம் என்று பின்லேடன் அந்த ஒலி நாடாவில் பேசி இருந்தார். இணைய தளத்தில் ஒலித்த குரலும் பேச்சின் பாணியும் பின்லேடன்தான் என்பதை உறுதிப்படுத்தியது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்: இந்திய அரசு செய்துகொள்ளாதாம்!

## மன்மோகன்சிங் உறுதியளிப்பு



தமிழர்களின் நலனைக் கருத்திற் கொண்டு இலங்கையுடன் எவ்வித பாதுகாப்பு உடன்படிக்கையையும் இந்தியா செய்துகொள்ளமாட்டாதென பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளதாக ம.தி.மு.கவின் அவைத் தலைவர் எல்.கணேசன் தெரிவித்தார்.

பலாலி விமான ஓடுபாதையை திருத்தியமைத்து அதனை சிறந்த ஒரு நிலைக்கு கொண்டுவர இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளியான செய்தியை அடுத்து, தமது கட்சி எதிர்ப்புத் தெரிவித்த நிலையிலேயே பிரதமர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் பலாலி விமானத் தளத்தை இந்தியா திருத்தியமைத்து அதனை நல்ல நிலைகது கொண்டு வருமாக இருந்தால், அது தமிழர்களுக்கு செய்யும் கேடாகவே அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக எமது கட்சியின் செயலர் வை.கோ - பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி ஆகியோருடனும் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை அறிமுக விழா!

## யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

மாலதி படையணியினரால் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை அறிமுகவிழா நேற்று யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

எழுத்தாளரும், புலிகளின் குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களில் ஒருவருமான ஆதிலட்சுமி - சிவகுமார் தலைமையில் நேற்று மாலை 4.30 மணியளவில் நடந்த இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை, 1991 ஆம் ஆண்டு ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் அமுதினியின் தந்தையார் சிவசுப்பிரமணியம் ஏற்றிவைத்தார்.

இதன்பின்னர், நிகழ்வின் அறிமுக உரையை எழுத்தாளரும், கப்டன் வானதி வெளியீட்டகத்தைச் சேர்ந்தவருமான போராளி தமிழவள் ஆற்றினார்.

ஒலிப்பேழையின் முதற்பிரதியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி வெளியிட்டுவைக்க மாவீரர் கப்டன் அமுதினியின் தாயார் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சிறப்புரையாற்றினார். இறுதியாக இந்த ஒலிப்பேழை உருவாக்கத்திற்காக உழைத்த கலைஞர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

# சமாதான முயற்சிகளில் தோல்வி...

இறுதியாக நடந்த சந்திப்பில் சொல்ஹெய்ம், அனுசரணையாளர்கள் என்ற வகையில் சில விடயங்களைத் தீர்க்கமாகவும் - தெளிவாகவும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எடுத்துக் கூறியுள்ளார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதாவது புலிகள் தமது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளார்கள் என்றும் ஆனால் அரசுத்தரப்பிலிருந்து ஒரு பகுதியினர் நோர்வேயின் அனுசரணைப் பணி தேவையில்லை என்று அறிவிக்கும் அளவுக்கு அரசாங்கத் தரப்பில் முரண்பாடு வலுத்துள்ளது.

தென்னிலங்கையில் எழுந்துள்ள இந்த இழுபறி நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அது ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. அந்தப்பணி அரசினால் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் அமைதி முயற்சிகள் முறிந்துவிடக்கூடிய அபாயப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது.

சமாதான முயற்சிகள் என்ற பெயரில் மூன்று வருடங்களாக எந்த முன்னேற்றமும் இன்றிய நிலையே காணப்படுகிறது. இந்தநிலையில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தக்க வைத்து யுத்தம் ஏற்பட்டுவிடாது பாதுகாத்துக்கொள்ளும் வகையில் நாம் பாடுபடுகிறோம் என்ற சாரப்பட அவர் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

சந்திப்பின் பின்னர் அதுபற்றி அறிக்கை விடுத்த அரசுத் தரப்பு - அமைதிச் சூழ்நிலையை பரஸ்பரம் ஏற்படுத்திக் கொள்வதற்கு முட்டுக்கட்டைகளாக உள்ள சில செயற்பாடுகள் மற்றும் அறிக்கைகள் குறித்து கவலை தெரிவிப்பதாகக் கூறி ஜே.வி.பியை மறைமுகமாகத் தாக்கியிருப்பதாகத் தெரிவித்த மேற்படி அவதானிகள் இன்னொரு மிக முக்கிய விடயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதாவது புலிகள் தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் உரையின் போது தெற்கிலுள்ள அரசியல் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட குழப்பமான கூட்டணியிலிருந்து தீர்வொன்றை எப்படி எதிர்பார்ப்பது என்று கேள்வி எழுப்பி இது விடயத்தில் சர்வதேச சமூகத்தின் நியாயமான கரிசனையைக் கோரியிருந்தார்.

தலைவர் பிரபாவின் இந்த விழிப்பிற்கு சரியான பதிலை அண்மையில் ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைகள் தென்னிலங்கை அரசியல் முரண்பாடுகள் குறித்துக் கவலை தெரிவித்து ஜே.வி.பியின் சமாதான விரோதப் போக்கைக் கண்டித்து அதனை வழிக்குக் கொண்டுவருமாறு ஜனாதிபதிக்கு வேண்டுகோளும் விடுத்திருந்தன. இந்த அழுத்தமும் ஜனாதிபதிக்கு தற்போது பெரும் சிக்கலைத தோற்றுவித்திருக்கிறதென அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நெருக்கடியைத் தணிக்க ஜனாதிபதி யுத்தத்தை நோக்கி நகர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. தாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாகப் பேணுவதாக நோர்வேயிடம் உறுதியளித்துள்ள போதும் அவரது கூற்றுக்களை நம்பமுடியாது.

பெரும்பான்மை உள்ள நாடாளுமன்றைக் கலைக்கமாட்டேன் என்று சபாநாயகருக்கு கடிதம் எழுதிவிட்டு அடுத்த வாரமே ஐ.தே.க. அரசைக் கலைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா என்று அவர்கள் சுட்டிக்காட்டி, இந்த நிலைமை இயல்பாகவே யுத்த பீதியை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

### பேச்சுக்....

மையில் நேற்று இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் குறித்து நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்த விருப்பதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

### கிணற்றுக்குள்....

இளைஞனின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணையின் பின்னர் சடலம் அவரது உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்த இளைஞர் யாழ் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் ஒப்புநோக்குநராக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது

### அடுத்த....

பார். மக்களின் பலம் இருக்குமானால், தமக்குத் தேவையானவற்றை அரசியல் யாப்புக்கு அமைவாகவும், சட்டத்திற்கு இணங்கவும் எதையும் மேற்கொள்வோம் என்பதை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கூறுகின்றோம்.

யார் வேண்டுமென்றாலும் வீதியில் செல்லலாம். நாங்கள் எமது பயணத்தைத் தொடர்வோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### ஆழ ஊடுருவி...

பிரிவு உறுப்பினர்களை இலக்கு வைக்கும் சூழ்நிலை உருவாகியது.

விடுதலைப் புலிகளின் தலைவரை ஒரு வாரகாலத்தில் கைது செய்யும் திறன்மிக்க விசேட படையணி இந்தியாவிடம் இருக்கிறது. தேவை ஏற்படும்போது அவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவரை கைதுசெய்வார்கள்.

அதேவேளை வரலாற்றில் நோர்வே மேற்கொண்ட எந்த ஒரு சமாதான முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை என்று மேற்படி கருத்தரங்கில் போல்ஹரிஸ் தெரிவித்தார். (01)

# எஸ்.பி.திஸநாயக்க போகம்பரை சிறைக்கு?

நீதிமன்ற அவமதிப்புக் குற்றங்களுக்காக இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் கைதியாக இருக்கும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கு மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகள் எத்தகைய கருத்துக்களையும் வெளியிட மறுத்துவிட்டபோதிலும் மேலிடத்தின் உத்தரவு காரணமாகவே இவர் கண்டி போகம்பரைச் சிறைச்சாலைக்கு மாற்றப்படவிருப்பதாக தெரியவருகின்றது.

இதேவேளை நேற்று எஸ்.பி. திஸநாயக்க தனது கண்ணுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக ஸ்ரீஜெயவர்த்தனபுர வைத்திய சாலைக்கு சிறைச்சாலை அதிகாரிகள் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சையின் பின்பு மீண்டும் சிறையிலடைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

### அரசாங்கம்....

லேயே இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டியநிலை ஏற்பட்டது.

ஆனால் இன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை உள்ளது. நாடாளுமன்றிலும், சர்வதேசத்திலும் எமது மக்கள் ஆணையைக் கூறிவருகின்றோம். எம்மைக் கண்டு நாடாளுமன்றில் பேரினவாதிகள் கூச்சல் போடுகின்றார்கள்.

சுய அரசியல் லாபங்களுக்காக அரசுடன் இணைந்து அரச வானொலியில் இதயவீணை வாசிக்கின்றார்கள். இந்த வெற்றுப் பிரசாரங்களை நம்ப எமது மக்கள் தயாராக இல்லை. இவ்வருட தேர்தலுடன் இராணுவ சமநிலையில் இருந்த புலிகளுக்கு அரசியல் சமநிலையும் ஏற்பட்டுள்ளது என்றார். (111)

### இனந்....

வது -

மேற்படி இளைஞர் இரவு உணவை உட்கொண்டபின்னர் வீட்டிலுள்ளவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த நேரம் அங்கு வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் இவரை வெளியே நின்று பெயர் கூறி அழைத்ததாகத் தெரியவருகிறது.

இதனையடுத்து அவர் வெளியே சென்றபோது ஆயுதபாணிகள இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் மேற்படி இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இவரது சடலம் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்ணீர் அஞ்சலி

17.12.2004 அன்று காலமான

**நடராஜா வடிவம்மா**

அவர்களின் பிரிவுத் துயர் கேட்டு வேதனை அடைவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கனகசபை குடும்பம்
றீகல் வீடியோ (ஈச்சமோட்டை)

(C/3492)

நத்தார் புது புத்தாண்டை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி




I.Đ.Đ லோக்கல் இணைப்புகளுடன்
எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்,
ஒருவருட உத்தரவாதம் உண்டு.

விலை - 13 900/= மட்டும்
I.Đ.Đ ரூபா 25/= மட்டும்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயக்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது மொபிடல் இணைப்பு.

சிறிலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்

கையிருப்பு உள்ளவரை மட்டும் உடனே விரையுங்கள்

அழைப்புக்கான வாடகை
மாதக் கட்டணம் - 150/=
வெளிச்செல்லும் அழைப்பு (பகல்) I நிமிடம் - 11/=
வெளிச்செல்லும் அழைப்பு (இரவு) I நிமிடம் - 6/=
உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் I நிமிடம் - 4/=
உள்வரும் அழைப்பு இரவு - இலவசம்

மேலதிக விபரங்களுக்கு:
பவர் செலூலர் ரேடிங்கம்பனி
Office : இல. 185 முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 212227070, 0712399220, 0777281521.

குறிப்பு:
டயலொக் மேசைத் தொலைபேசி இணைப்புடன் 12000/= மட்டும்

(C/34487)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மக்களின் தேவைகளை இனங்கண்டு அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும்

## அரச அதிபர் செ.பத்மநாதன்

(கொழும்பு)

சமூக பொருளாதார அபிவிருத்தி என்பது மிகவும் ஆழமானதும், பெரிய பரப்பளவைக் கொண்டதுமான விடயம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி தொடர்பான தெளிவு, அதனை அமுல் செய்யும் உத்தியோகத்தர்களுக்குத் தேவை. யுத்த நேரத்தில் எமது அபிவிருத்தி இலக்கு என்ன? யுத்தம் அல்லாத நேரத்தில் அபிவிருத்தி இலக்கு என்ன என்பது தொடர்பான தெளிவு தேவை. இந்தச் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி தொடர்பாக அரசின் பங்கு என்ன? அரசுசாரா நிறுவனங்களின் பங்கு என்ன? சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களின் பங்கு என்ன? மக்களின் பங்கு என்ன? என்பது பற்றி ஆராய்ந்து தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும் என யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி நிறுவனமும் யாழ்.செயலகமும் யாழ்.மாவட்ட அபவிருத்தி சமூக சேவை நிறுவனமும் இணைந்து செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடத்திய சமூக அபிவிருத்தியில் பங்கேற்றல் தொடர்பான இருநாள் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

இன்றைய சூழ்நிலையில் மக்களின் தேவைகள் பொருளாதார சமூக அபிவிருத்தியில் இனங்காணப்படவேண்டும். வடமாகாணத்தில் 40 வீதமான மக்கள் இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். வெளிநாடுகளில் கணிசமான மக்கள் வாழ்கின்றார்கள். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, வறுமைக் கோட்டுக்குக் கீழ் ஒரு பகுதி மக்கள் வாழ்கிறார்கள். இன்னொரு பிரிவினர் வெளிநாட்டுத் தொடர்புடன் செல்வ நிலையில் வாழ்கின்றார்கள். எமது திட்டங்கள் இரு பிரிவினர்களையும் உள்ளடக்குகின்றது. இரு வேறு நோக்கங்கள் உள்ளடக்கி திட்டங்கள் இனம் காணப்படவேண்டும்.



அதேநேரம், முதலாவது பிரிவினர் எமது பழைய கலாசார விழுமியங்கள், பாரம்பரியம் என்பதைப் பேணுபவர்களாக் காணப்படுகின்றார்கள். இரண்டாவது பிரிவினர் வெளிநாட்டுத் தொடர்பு காரணமாக வெளிநாட்டுப் பண்பாடு, விழுமியங்களைப் பகுதியாக உள்வாங்குபவர்களாக் காணப்படுகிறார்கள்.

வெளிநாட்டு நிறுவனங்கள் வந்து உதவி செய்கின்றன. அவை கம்போடியா, இந்தோனேசியா, உகண்டா, கென்யா போன்ற நாடுகளில் கடைப்பிடித்த அணுகுமுறைகளை சிபாரிசு செய்கின்றன. ஆனால் அவை இங்கு பொருந்துமா? என்று பார்த்து, கடைப்பிடிக்கவேண்டும்.

அபிவிருத்தியைப் பொறுத்து உள்ளூராட்சி மன்றங்கள் கூட்டுறவு இயக்கம் முக்கியத்துவம் வகிக்கக்கூடிய நிறுவனங்கள் - அபிவிருத்தியை இந்த நிறுவனங்கள் மூலம் வலுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

வடக்கு - கிழக்கு மாகாணப் உள், வெளிச் சூழ்நிலையை ஆராய்ந்து அபிவிருத்தி தந்திரோபாயத்தை அமைத்துக்கொள்ளவேண்டும். அதனை வெவ்வேறு அணுகுமுறைகளையும், உத்திகளையும், உபாயங்களையும் உத்தியோகஸ்தர்கள் தமது இயல்பாற்றலுக்கு பொருந்த தெரிவு செய்து, அமுல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

### ஐங்கரன் பாலர்நிலைய கலைவிழா

சாவகச்சேரி - மண்டுவில் இலஞ்சியாரணியம் ஐங்கரன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய கலைவிழா நாளை பிற்பகல் 2 மணிக்கு ஐங்கரன் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (25)

### ஏகாதசிப் பெருவிழா

மட்டுவில் கிழக்கு - புதநன் கேணியவளவு மாகாளி அம்மன் ஆலயத்தில் திருவருட்கூட சொர்க்க வாசல் ஏகதாசிப் பெருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தொடர்ந்து பரந்தாமனின் ஆனந்தத் திருநடனமும் இடம் பெறும். (25)

### தவணைப்பணத்தைச் செலுத்துமாறு அறிவுறுத்து

சாவகச்சேரி கமநல சேவைத் திணைக்களத்தில் "சீடா" திட்டத்தின் மூலம் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்றவர்கள் அதற்குரிய தவணைப் பணத்தை உடனே செலுத்துமாறு பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

மேற்படி பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு 2004 ஆம் ஆண்டு சீடாதிட்டத்தின் கீழ் விவசாய சம்மேளனத்தின் சிபார்சுடன் 33 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (29)

## உணவூட்டவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுகாதார சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இரசாயனவியல் விடயங்களில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான விஞ்ஞானவியல் பட்டதாரிகளிடமிருந்து உணவூட்டவியலாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை ஒன்றினூடாக நியமனம் செய்யப்படவுள்ள இந்தப் பதவிக்கு 22-40 வயதுக்கிடைப்பட்ட பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் யாவும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகம் இல.385, வண.பத்தேகம விமலசங்கரதேர் வீதி, சுவசிறிபாய, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்பப் படிவங்களையும் இந்த மாதம் 17 ஆம் திகதிவெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் பார்வையிட முடியும். (31)

## சுவிஸ் மினரல் குடிநீர் மக்கள் பாவனைக்கு



யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினூடாக ஜனவரி முதலாம் திகதி முதல் சுவிஸ் மினரல் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மக்கள் பாவனைக்கு வரவுள்ளது.

இந்த சுவிஸ் மினரல் எனும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை - யாழ்.மாவட்டத்தில் விநியோகம் செய்வதற்கு, யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் சுவிஸ் மினரல் குடிநீரைத் தயாரிக்கும் நிறுவனமாகிய **Global Business Network** கடந்த 15 ஆம் திகதி ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

இதில் சுவிஸ் மினரல் நிறுவனத்தின் சார்பில் அதன் இயக்குநர் எஸ்.சுப்பிரமணியமும், விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் சார்பில் ப.கனகலிங்கமும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

## சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நாடகப்போட்டி நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2005 ஆம் ஆண்டின் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு மத்திய சுற்றாடல் அதிகார சபையினூடாக, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் வளங்களின் முகாமைத்துவம் தொடர்பான சிந்தனைகளை மக்களிடையே வளரச் செய்வதையும், மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிக்கொண்டுவரச் சந்தர்ப்பம் அளிப்பதையும் நோக்கங்களாகக் கொண்டு, நாடளாவிய ரீதியில் சுற்றாடல் நாடகப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

முகாமைத்துவத்தினூடாக வளங்களின் நிலைபேண் தன்மையைப் பேணுதல் என்ற கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நாடகப் போட்டி - பாடசாலை மாணவர்களுக்கெனவும், தொழில்சார் கலைஞர்களுக்கெனவும் இரு வேறு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

இயற்கை வளங்களை முகாமை செய்தல், சுற்றாடல் மாசுபடல், மனித சுகாதாரமும் அதன் நல்வாழ்வும், கடற்கரையோரமும் கடல் வளங்களும், காடும் காட்டு விலங்குகளும், கைத்தொழிலும் அபிவிருத்தியும், சூழல் பாதுகாப்பு, கலாசார விழுமியங்கள், மண்வளத்தைப் பேணிப் பாதுகாத்தல் போன்ற தலைப்புகளில் ஏதாவது ஒரு தலைப்பைக் கொண்டதாகப் படைக்கப்படும் நாடகங்கள் பதினைந்து நிமிடங்களுக்கு மேற்படாத வகையிலும், இருபது கலைஞர்களுக்கு மேற்படாத பங்குபற்றுனர்களையும் கொண்டிருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் நாடகங்கள் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு, பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுவதோடு, மாவட்ட ரீதியில் முதலிடம்பெறும் நாடகம் - தேசிய ரீதியிலான போட்டியில் பங்குபற்றச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

மாவட்ட ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கென நடத்தப்படும் நாடகப்போட்டியில் முதலாம் பரிசாக பத்தாயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக ஏழாயிரத்து 500 ரூபாவும், மூன்றாம் பரிசாக ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படுவதோடு, தலா இரண்டாயிரம் ரூபா வீதம் ஐந்து ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவானதாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் நாடகங்களை உள்ளடக்கியதான விசேட நாடக அரங்கேற்ற நிகழ்வு - 2005 ஜூன் 05 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் நாடகத்தின் பிரதி ஆக்கம் ஒன்றை தமது சொந்த ஆக்கம் என்ற உறுதிப்படுத்தலுடன் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் பத்திரத்துடன் எதிர்வரும் ஜனவரி முப்பதாம் திகதிக்கு முன்பாக பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் பிரிவு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, பரிசரபியச, இல.104 டென்சில் கொப்பேகடுவ வீதி, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சுற்றாடல் நாடகப் போட்டி - 2005 எனக் குறிப்பிடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (31)

### சுற்றுப்போட்டிக்கு அணி தெரிவு

(கொழும்பு)

பண்டாரவளையில் நடைபெறவுள்ள 2004 ஆம் ஆண்டுக்கான மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான அணித்தெரிவு, இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மத்தியகல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள இந்தத் தெரிவில் வீரர்களைப் பங்குபற்றுமாறு மேசைப்பந்தாட்ட சங்கத்தினர் கேட்டுள்ளனர். (111)

### விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு

இலங்கையிலிருந்து இந்தியா செல்லவுள்ள மேசைப்பந்தாட்ட அணியில் பங்குபற்றும் யாழ். மாவட்ட வீரர்கள் ஆறு பேரையும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையினர் கௌரவித்துள்ளனர்.

போட்டி, பயிற்சிகளில் பங்குபற்றவுள்ள இந்த அணியினருக்கான ஆரம்ப கட்டப்பயிற்சிகள் 23 ஆம் திகதி திருமலையில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(111)

### வருடாந்த மஹோற்சவம்

மட்டுவில் கிழக்கு - புதநன்கேணி வளவு மாகாளி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 தினங்கள் அலங்கார உற்சவம் - காலை 7 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். (25)

## திடுடர்களைத் தடுப்பதற்காக சிவில் உடையில் பொலிஸார்

பண்டிகைக் காலத்தில் யாழ். நகரப் பகுதிக்கு வரும் பொது மக்கள் தமது தங்க ஆபரணங்கள், கைப்பைகள், வாகனங்கள் என்பவற்றில் மிகவும் அவதானமாக இருக்கும்படி, யாழ்.நகர குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக் காலமாக யாழ். நகரப் பகுதியில் அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் முகமாகவே, இன்று முதல் மக்களை அவதானமாக இருக்கும்படியும், குற்றத்தைக் கட்டுப்படுத்த சிவில் உடையில் பொலிஸார் நடமாடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்மூலம் இந்தமுறை பண்டிகைக் காலங்களில் நடைபெறும் குற்றங்களைத் தடுக்கமுடியும் எனவும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டனர்.

### அல்வாய் - பாரதிதாஸன் சனசமூகநிலைய பரிசளிப்பு விழா

அல்வாய் - பாரதிதாஸன் சனசமூக நிலைய நூலக நுண்கலை பயிற்சியாளர்கள் அரங்கேற்றமும், நல்லொழுக்க தமிழறிவுப் போட்டி பரிசில் வழங்கும் நிகழ்வும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் பாரதிதாஸன் நூலகத்தில் நடைபெறவுள்ளது.

நூலகத் தலைவர் கி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா கலந்துகொள்ளவுள்ளார்.

### பிரதேச செயலரின் இடமாற்றம் இரத்து

ஜனவரி 3 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெறவிருந்த தென்மராட்சிப் பிரதேச செயலாளர் செ.சிறினிவாசனின் வருடாந்த இடமாற்றம் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மறு அறிவித்தல்வரை இரத்து செய்யப்பட்டுள்ளது. (29)

### சங்கநாதம் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 'சங்கநாதம்' நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

செய்திக்கட்டுரை...

குமரன், நக்கீரன்

# வன்னிப் பெருநிலப் பரப்பில் வெள்ளப்பெருக்கு...
# இயற்கையின் அனர்த்தத்தால் இன்னலுறும் மக்கள்...

கடந்தசில மாதங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழையால் வன்னிப் பெருநிலப்பரப்புப் பெரிதும் பாதிக் கப்பட்டு, பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இவ்வாறு தஞ்சம் புகுந்துள்ள மக்களில் பரந்தன் - புதுக் குடியிருப்புக்கு இடைப்பட்ட சில பிரதேசவாழ் மக்களை, அவர்கள் தஞ்சம் புகுந்துள்ள பாடசாலைகள், ஆலயங்களுக்குச் சென்று பார்வையிட்டு அவர்களிடம் இந்த வெள்ள அனர்த்தம்



சாலையில் தஞ்சம் புகுந்துள்ள மக்களைப் பார்வையிடச் சென்றோம். அதன்போது அங்கு படுக்கைவிரிப்பு, பாய், பால்மா, பிஸ்கற், இரண்டு சிறிய றபர் குவளை ஆகியவற்றைக் கண்டாவளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலனும், நாகேந்திரபுரம் கிராம சேவகர் நாகேந்திராவும் KNDO நிறுவனத்தினரின் ஆட்பல உதவியுடன் வழங்கிக்கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இது தொடர்பாக உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலனைக் கேட்ட போது, இந்தப் பாடசாலையில் நாகேந்திரபுரம், புளியம் பொக்கணை பெரியகுளம் ஆகிய கிராம மக்கள் தஞ்சம் புகுந்துள்ளனர். இங்கு தங்கியுள்ள 200 குடும்பங்களுக்கும் கிளி நொச்சி மாவட்ட அரச அதிபரின் பணிப்

யாத நிலையேற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து நாம் அங்கிருந்து மீண்டும் விசுவமடு பிரதேசம் சென்றடைந்து, விசுவமடு மகா வித்தியாலத்தில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுடன் இந்த வெள்ள அனர்த்தம் தொடர்பாகக் கேட்டறிந்தோம். அந்த வரிசையில் ஆறுமுகம் முத்துராசம்மாவை அணுகியபோது,

எமது வீடு முற்றாக வெள்ளம் உள் நுழைந்து, வீடு ஊறல் எடுத்து, இடிந்து விழுந்துள்ளது. நாங்கள் செய்த சிறு பயிரத் தோட்டங்கள் அனைத்தும் அழிந்து போய்விட்டன. எனக்கு எந்த ஆண் உதவியும் இல்லை. எனது மகனும், மருமகனும் போரால் பாதிக் கப்பட்டு இறந்து விட்டார்கள். நானும் மகளும் மூன்று பேரப்பிள்ளைகளுமாக வாழ்ந்து வருகிறோம். கூலி வேலைக்குச் சென்றுதான் எனது குடும்பத்தைப் பாராமரிக்கிறேன். இப்போது வீடும்



பாடசாலைகள், ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதில் முக்கியமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்கள் - புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம், விசுவமடு, பாரதிபுரம் ஆகியனவாகும். இந்த மக்களது வீடுகளில் வெள்ளம் புகுந்து, முற்றாகச் சேதமடைந்துள்ளன. இவர்கள் மீளத் திரும்ப முடியாதுள்ளனர்.

பாரதிபுரத்துக்குச் செல்லும் வழியில் அமைக்கப்பட்ட மரத்தி லான பாலம் முற்றாகச் சேதமடைந்து, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

தொடர்பாகக் கேட்டோம். அவர்கள் எங்களுடன் பகிர்ந்து கொண்டதை உங்கள் பார்வைக்கு முன்வைக்கின்றோம்.

15 ஆம் திகதி காலை 8 மணியளவில் பிரதான வீதி வழியால் சென்றுகொண்டிருக்கும்போது, அந்த வீதியெங்கும் வெள்ளத்தினால் அரியுண்டு குன்றும் குழியுமாக இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அதை எல்லாம் கடந்து புளியம்பொக்கணை 7 ஆம் கட்டை கோஸ்வேயடியைச் சென்றடைந்தோம். அங்கு மக்களைப் படகு மூலமும், உழவு இயந்



திரம்மூலமும் ஏற்றி, இறக்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்தப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களிடம் அந்தப் பணி சம்பந்தமாகக் கேட்டபொழுது, முதலில் இந்தக் கோஸ்வே பைப்பினூடாகப் பெருமளவு வெள்ளம் பாய்வதை அறிந்த விசுவமடு பிரதேச அரசியற்துறையினர், உடனடியாக விசுவமடு பிரதேச போர் எழுச்சிக் குழுவினரின் உதவியுடன் உதவிப் பணியில் ஈடுபட்டனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம், கரைச்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கண்டாவளை ஆகிய நிறுவனங்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தினர் படகுமூலம் மக்களை ஏற்றி இறக்கியவண்ணம் இருந்தனர். T.R.O, SEDO ஆகிய நிறுவனங்கள் உழவு இயந்திர மூலம் மோட்டார் சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றை ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தனர்.

மேலும் இந்த இடத்தில் போர் எழுச்சிக் குழுவினர், போராளிகள், சமூக நலன் விரும்பிகள் ஆகியோர் இரவுபகல் பாராது, முற்றிலும் இலவசமாக முழுநேரப் பணியில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

நாமும் அந்தப் பாதைவழியே அவர்களின் உதவி மூலம் கோஸ்வேயைத் தாண்டி புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாட

பின்பேரில் இந்தப் பொருட்களை வழங்கி வருகிறோம். கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த அனைத்து மக்களுக்கும் முதல் கட்டமாக இந்த உதவியைச் செய்யத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

இதன்பின்னர் வெள்ளத்தால் பதிப் படைந்த ஒரு சில மக்களுடன் கலந்துரையாடினோம்.

புளியம்பொக்கணையைச் சேர்ந்த நவரட்ணம் என்பவரிடம் இந்த வெள்ள அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புக்கள், கிடைக்கப்பெற்ற உதவிகள் தொடர்பாகக் கேட்டபொழுது அவர் கூறியதாவது -

கடந்த நாட்களாகப் பெய்த தொடர் மழையினால் எமது வீட்டினுள் வெள்ளம் புகுந்து, வீட்டில் தங்கியிருக்க முடியாத நிலையேற்பட்டபின், நாம் இந்தப் பாடசாலையில் வந்து தஞ்சம் புகுந்தோம். அப்போது இங்கு எமது விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினரும், போர் எழுச்சிக்குழு வினரும் எமக்கு ஆதர வழித்துத் தங்குவதற்குரிய சகல ஒழுங்குகளையும் செய்து தந்தனர். T.R.O, KNDO, SEDO ஆகிய நிறு வனங்களின் உதவியுடன் எமக்குச் சமைத்த உணவையும், தங்குமிட வசதிகளையும், ஒளியூட்டல் வசதிகளையும் செய்து தந்தனர். மூன்று தினங்களின்பின்னர் தான் எம்மை ஏனைய அரச, அரசசார் பற்ற நிறுவனங்கள் வந்து, பார்வையிட்டுச் சென்றனர். தற்போது கண்டாவளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் மூலம் சிறு பொருட்களை வழங்குகிறார்கள்.

நாம் இவற்றைப் பெற்றுக்கொண்டு இங்கு தொடர்ந்து இருக்கமுடியாது. எனவே சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நாம் மீளச் சென்று குடியமருவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து தருமாறு கேட்கிறோம் எனத் தெரிவித்தார்.

வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாகக் கேட்டபோது, எமது நெற் பயிர் வேளாண்மை அனைத்தும் பெரும் அழிவுக்குள்ளாகியுள்ளது. 1000 - 1500 ஏக்கர்வரை அளவிலான வயல் நிலங்கள் முற்றாக அழிந்துவிட்டன. இதனால் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 50 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரையிலான வெள்ள அழிவு ஏற்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்தனர். மேலும் புளியம் பொக்கணை கீழ்க்கரை, கண்டாவளை ஆற்றங்கரை, பெரியகுளம் ஆகிய கிராமங்களின் அனைத்து வீடுகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்து, சுவர்களும இடிந்து விழுநதுள்ளன. எனவே புனரமைப்புப் பணிகள் செய்யாது எம்மால் மீளக் குடியமர முடி

இடிந்து மீளப்போக முடியாதுள்ளது. இங்கு போராளிகள் - சமைத்த உணவுகளை வழங்கிறார்கள். தங்கியிருக்கிறதுக்குரிய ஒழுங்குகளையும் செய்திருக்கிறார்கள். அவர்களாலும் எத்தனை நாளுக்குத்தான் வழங்கமுடியும். நாங்களும் எத்தனை நாளுக்குத்தான் இங்கு



இருக்கிறது. இப்போது எனக்கும், மகளுக்கும் காய்ச்சல் படித் துள்ளது. எந்த மருத்துவ வசதிகளும் செய்துதரவில்லை. போராளிப் பிள்ளைகள் பனடோலைத் தந்துதவுகிறார்கள். அரசசார்பற்ற நிறுவனங்கள் என்று நிறையப் பேர வாகனங்களில் கொடியைப் பறக்க விட்டுக்கொண்டு திரிகிறார்கள். அவர்கள் மக்களுக்குச் சேவை செய்யிறதாகச் சொல்லுவார்கள். ஆனால் நாங்கள், இங்கே எந்த உதவியும் இல்லாமல் இருக்கிறோம். ஏதோ எங்கட போராளிப் பிள்ளைகள் எங்களுக்கு SEDO, T.R.O மூலம் சமைத்த உணவையும், தங்களாலான உதவிகளையும் செய்கிறார்கள். எனவே நாம் மீளச்சென்று





எமது இடங்களில் மீளக் குடியமருவதற்குரிய ஒழுங்கைச் செய்து தருமாறு கேட்கிறோம் எனக் கூறினார்.

இறுதியாக நாம் விசுவமடு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ரூபனைச் சந்தித்து இந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளீர்கள் என்றும், எந்த எந்த நிறுவ்னங்கள் உதவிகளை மேற்கொண்டுவருகின்றன. எவ்வாறான உதவிகளை உங்களால் பெற் றுக்கொடுக்க முடிந்தது என்றும் அவரிடம் கேட்க அவர் -

கண்டாவளை, புளியம்பொக்கணை, நாகேந்திரபுரம், தருமபுரம், விசுவமடு, பாரதிபுரம், சுண்டிக்குளம், நாச்சிக்குடா ஆகிய கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, மக்கள் ஆங்காங்கே இடம்பெயர்ந்து உறவினரின் வீடுகள்,

இப்பொழுதும் அந்தப் பாலத்தின் வழியே 8 அடி நீர் பாய்ந்தவண்ணமுள்ளது.

பாலம் உடைந்ததும் நாம் நேரடியாகச் சென்று, அந்த மக்களை மீட்டுவந்து விசுவமடு மகா வித்தியாலயத்தில் தங்கவைத்தோம்.

அந்தக் கிராமத்தில் வசிக்கும் 250 வரையிலான குடும்பத்தினரையும் மீட்டுவந்து அவர்களுக்கான உதவியை SEDO நிறுவனத்தினரினது (சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின்) உதவியுடன் மக்களுக்குச் சமைத்த உணவைக் கடந்த மூன்று தினங்களாக வழங்கி வந்தோம்.

எனினும், இதுவரை T.R.O, SEDO தவிர்ந்த ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பார்வையிடவோ அன்றி, எந்தவித நிவாரண உதவிகளையோ வழங்காது பாராமுகமாக உள்ளன.

புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் தயானந்தா, விசுவமடு மகா வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள மக்களைப் பார்வையிட்டு, அவர்களுக்குச் சில உதவிகளைச் செய்வதாகக் கூறிச் சென்றுள்ளார்.

எனினும், நாம் விசுவமடு மகா வித்தியாலயத்திலும், புளியம் பொக்கணை நாகேந்திரா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு SEDO, T.R.O ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் சமைத்த உணவையும், அவர்களுக்கான இரவு நேர ஒளியூட்டல் வசதிகளையும் செவ் வனே செய்து வருகிறோம்.

மேலும் அவர் தனது வேண்டுதலாக வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, காலத்தின் தேவையை உணர்ந்து, தக்க தருணத்தில் உதவ அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை முன்வர வேண்டுகின்றோம் எனத் தெரிவித்தார்.